விலை ரூபா: 5.00

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# வலம்புரி

# VALAMPURI

சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | கார்த்திகை 12 வியாழக்கிழமை (28.11.2002) | தொலைபேசி~ 2223378 | ஒலி 344

## உலகின் போக்குடன் முரண்படுவது விவேகமானதல்ல

## நம்மை நாமே ஆளும் தீர்வு அவசியம்

# சமாதானம் குழப்பப்பட்டால்

# தனியரசு அமைவது திண்ணம்

### மாவீரர் தினத்தில் தலைவர் பிரபாகரன் உரை

(நமது நிருபர்)

**தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப்பிரச்சினையில் சமாதான வழியில் தீர்வு காண்பது சாத்தியமாயின் அதனை முயன்று பார்ப்பதில் முழுமனதுடனும், நேர்மையுடனும் செயற்படத் தயாராக இருக்கின்றோம்.**

**எமது மக்கள் தமது தாயக மண்ணில் தம்மைத்தாமே ஆட்சி செயயும் உரிமையுடையவர்களாக, சுதந்திரத்துடன் கௌரவமாக வாழ வேண்டும் என்பதே எமது போராட்ட இலட்சியமாகும். இந்த இலட்சியம் நிறைவேற்றப்படுமாயின். சமாதான வழியைத் தழுவ நாம் என்றும் தயாராக உள்ளோம்.**

மாவீரர் தினத்தை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நேற்று மாலை ஆற்றிய உரையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர்தின உரை வன்னி நேரம் 5.46க்கு ஆரம்பமாகி தொடர்ந்து 19 நிமிடங்கள் வரை நீடித்தது.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இம் மாவீரர் தினஉரை கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில்12 அடி அகலமான வெண் திரையில் அவரது உருவப்படத்துடன் கூடியதாக ஒளிபரப்பானது.

இம் மாவீரர் தினத்தில் தலைவர் வே.பிரபாகரன் ஆற்றிய உரையின் முழுமை 7ம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது. (ம)



## நெஞ்சை நெருட வைத்த மாவீரர் தினம்

# மௌனமாய் துயிலும் மாவீரர்க்கு நேற்று விழிநீர் சொரிய அஞ்சலி

# நேற்று விழிநீர் சொரிய அஞ்சலி

## பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கேற்பு

(அலுவலக நிருபர்கள்)

தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வுகள் நேற்று யாழ்.குடா நாட்டில் உணர்ச்சி பூர்வமாகவும் எழுச்சி பூர்வமாகவும் அனுஷ்டிக்கப்பட்டது.

தாயக மீட்புப் போரில் தம் இன்னுயிர்களை தற்கொடையாக வழங்கிய மாவீரர்களை நெஞ்சிலிருத்தி அவர்களைத் துதிக்கும் மகத்தான இவ் எழுச்சி நிகழ்வில் மக்கள் அலையெனத் திரண்டிருந்தனர்.

யாழ்.குடா நாடு எங்கும் மாவீரர் தின நிகழ்வால் விழாக் கோலம் பூண்டிருந்தது.

நகரங்கள், சந்திகள், வீதிகள் பொது இடங்கள் மற்றும் மூலை முடுக்கெங்கும் நிகழ்வெழுச்சியின் வெளிப்பாடாக, சிவப்பு மஞ்சள் வர்ணக் கொடிகள் கட்டப்பட்டு போராட்ட வரலாற்றைச் சித்திரிக்கும் அலங்கார வளைவுகள் நிறுத்தப்பட்டு, மக்களை எழுச்சி கொள்ள வைக்கும் தாயகப் பாடல்கள் இசைக்க விடப்பட்டிருந்தன.

கோப்பாய், கொடிகாமம்,எல்லன்குளம் மற்றும் தீவகம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் வர்ண விளக்குகளினால் அலங்கரிக்கப்பட்டு புதுப் பொலிவுடன் எழுச்சி பெற்றுக் காணப்பட்டது.

துயிலும் இல்லங்களுக்கு மாவீரர்களின் பெற்றோர்கள் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்துச் செல்லப்பட்டனர்.

மாவீரரின் பெற்றோர்கள்,உறவினர்கள், போராளிகள் மற்றும் பொது மக்களால் மாவீரர் துயிலும் இல்லங்கள் நிரம்பி வழிந்தது.

தலைவர் பிரபாகரனின் மாவீரர்தின

(10ம் பக்கம் பார்க்க)

## கிழக்கிலுள்ள புலிகளின் நீதிமன்றங்களை உடன் மூடிவிடுக

## பொலிஸ்மா அதிபருக்கு பிரதமர் உத்தரவு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் நீதிமன்றங்கள் இயங்குமானால் அவற்றை உடனடியாக மூடிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பொலிஸ்மா அதிபர் ரி.இ.ஆனந்த ராசாவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் கிழக்கு மாகாணத்தில் தமிழீழ நீதிமன்றங்களையும்,காவல்துறை நிலையங்களையும் அமைத்து வருவது தொடர்பாக அமைச்சர் ரவூப் ஹக்கீம், மற்றும் முஸ்லிம் பாராளுமன்ற உறுபப்பினர்கள் பாராளுமன்றத்திற்குள்ளேயும், வெளியேயும் குற்றம் சாட்டி வந்ததையடுத்தே இந்த உத்தரவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பொலிஸ்மா அதிபருக்கு

(10ம் பக்கம் பார்க்க).

வாசகர்களே:-
இன்று உங்கள்
வலம்புரியின்
வாரமலர்
சங்கு நாதம்
விலை 12/=

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் இடம் பெற்ற காட்சிகள்.





நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### 2003- உங்களுக்கு எப்படி

எங்கும் விற்பனையாகின்றது. மற்றும் சகலபோட்டிப் பரீட்சைகளுக்கும் பொது அறிவு, உளச்சார்பு, மொழித்திறன், புதியபாடத்திட்டப்படி அழகியல் (தரம் 1-5வரை) V.Aசிவராசா வெளியிட்டது என்றுகேட்டு வாங்குங்கள் 152Bஅரசடிறோட் கந்தர் மடம் யாழ்ப்பாணம்.

(6242)

## சிவாஜிலிங்கத்தின் தந்தை மரணம்

(தென்மராட்சி)

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கத்தின் தந்தையாரும் ஓய்வுபெற்ற கல்வித் திணைக்கள உத்தியோகத்தருமான எம். கனகலிங்கம் கடந்த செவ்வாயன்று லண்டனில் இயற்கை மரணமெய்தியுள்ளார்.

இவரின் மரணச்சடங்கில் கலந்துகொள்ளும்வகையில் சிவாஜிலிங்கம் எம். பி. லண்டன் பயணமாகியுள்ளார்.

(உ-77)

## கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் 1798 நினைவுச்சின்னங்கள்

(யாழ்ப்பாணம்)

புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ள கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் ஆயிரத்து எழுநூற்றுதொண்ணூற்றெட்டு மாவீரர்களின் நினைவுச் சின்னங்கள் அவாகளது பெயர்களுடன் அமைக்கப்பட்டுள்ளன.

644நினைவுக் கல்லறைகளும், 1154 நினைவுக் கற்களும் மாவீரர்களின் பெயர்களுடன் அங்கு நிறுவப்பட்டுள்ளன.

(வ- 6)

அமைச்சர் மகேஸ்வரன் ஏற்பாட்டில்

## ஊடகவியலாளர்கள் இன்று நெடுந்தீவு செல்வர்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவின் நிலைமைகளை நேரில் தெரிந்து அதனை வெளிப்படுத்தும் வகையில், ஊடகவியலாளர்களை அமைச்சர்மகேஸ்வரன் இன்று அங்கு அழைத்துச் செல்லவுள்ளார்.

இதேவேளை, அமைச்சர் மகேஸ்வரன் கடந்த திங்கள் அங்கு நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்து அறிந்து வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

நெடுந்தீவு செல்லும் குழுவினருடன், தமிழ்க்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், என். ரவிராஜ் ஆகியோரும் அங்கு செலலவுள்ளனர்.

இவர்களுடன் 24 பத்திரிகையாளர்களும் செல்லவுள்ளனர்.

(பி)

## வீரசிங்கம் ஞாபகார்த்த சைக்கிள் ஓட்டப்போட்டி

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் 37 வது நினைவு தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபையால் ஆண்களிற்கான சைக்கிள் ஓட்டப்போட்டி ஒன்று அடுத்த மாதம் முதலாம் திகதி நடத்தப்படவுள்ளது.

பங்குபற்றவிருப்புபவர்கள் தங்கள் பகுதி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் அல்லது பனை, தென்னைவள அபிவிருத்திகூட்டுறவுச் சங்கம்அல்லது சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கம் என்பவற்றில் தலைவர் அல்லது பொது முகாமையாளரின் சிபார்சுடன், மாவட்ட செயலாளர் யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபைஇல, 12 காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

## கெற்பேலி கிராம அலுவலர் லொறி மோதி பலி

### சாவகச்சேரியில் கோரச் சம்பவம்

(தென்மராட்சி)

லொறி மோதியதில் கிராம சேவையாளர் ஒருவர் ஸ்தலத்திலேயே பரிதாபமாகப் பலியானார்.

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு முன்பாக நேற்று மு.ப 11 மணியளவில் இடம்பெற்ற இந்தக் கோரச் சம்பவத்தில் தென்மராட்சி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கெற்பேலிப் பகுதிக் கிராம சேவையாளரான கே. எம். சிவகுரு (வயது 50) என்பவரே பலியானவராவார்

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த லொறியே, மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த மேற்படி கிராம சேவையாளரை மோதியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(உ-77)

## யாழ். முஸ்லிம்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த முஸ்லிம் மக்களுக்கு கொழும்பிலுள்ள சமய நிறுவனங்கள் ரம்ழான் பண்டிகையையொட்டி உணவுப் பொருட்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளன.

உணவுப்பொருட்கள் அன்பளிப்புசெய்யும் வைபவம் நேற்று மாலை 4 மணிக்கு நாவலர் வீதி புதுப்பள்ளிவாசலில் இடம்பெற்றது.

உணவுப்பொதிகள் 90குடும்பங்களுக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டன மீளக்குடியேறிய குடும்பங்கள் நயினாதீவு, அச்சுவேலி, நெல்லியடி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் வாழ்கின்றனர்.

இதேவேளை முஸ்லிம்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறியபோது 4750 வீடுகள் இருந்தன என்றும் அவற்றில் இப்போது 73 வீடுகளே நல்ல நிலையில்உள்ளது என்றும் மீளக் குடியமர்ந்த ஜனாப்: மொபீன் தெரிவித்துள்ளார்.

(இ-16-9)

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவேன்

## ஜனாதிபதி மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

ஜனநாயக சுதந்திரம், அடிப்படை மனித உரிமைகள் ஆகியவற்றை பாதுகாக்காமல், வடக்கு- கிழக்கு பிரதேசங்களில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியாது என்பதை பொதுஜன ஐக்கியமுன்னணி, அரசாங்கத்துக்கு, விரிவாக விளக்கியுள்ளது என ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்றக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு ஆரம்பித்த சமாதான பேச்சுவார்த்தைகளை தற்போதைய அரசு முன்நகர்த்திச் செல்கிறது. இதற்கு தமது கட்சியின் பூரண ஆதரவு உண்டு.

1997 ஆம் ஆண்டு நடைபெற்ற அரசியலமைப்புக் கூட்டத்தினூடாக அதிகாரப் பரவலாக்கல் முறையினை முன்வைத்த பிரதான அரசியல் கட்சி பொதுஜனஐக்கிய முன்னணியே,

ஐக்கிய இலங்கைக்குள் அதிகளவு அதிகாரப் பகிர்வு என்ற அடிப்படையிலான இனப்பிரச்சினை தீர்வுக்கு எமது கட்சி தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படும்

இலங்கையின் நீதிமன்றச் சட்டத்துக்கு சவால் விடும் வகையிலும், ஆபத்துஏற்படுத்தும் வகையிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் வடக்கு- கிழக்கு பிரதேசங்களில் நீதிமன்றங்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களை அமைத்து வருகின்றனர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இவ்வாறான நீதிமன்றங்களையும் பொலிஸ் நிலையங்களையும் அமைத்து வருவது, அரசின் நிர்வாகப்பலத்தை குறைக்கும் செயலாகும்என்று குறிப்பிட்டனர்.

மேலும், ஈ.பி.டி.பிக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள், மற்றும் அவர்களுக்கு நெடுந்தீவில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்து தான் கவனம் செலுத்துவதாகவும்,

ஜனநாயக ரீதியிலான தமிழ்க் கட்சி ஒன்றுக்கு இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளதால் வடக்கு- கிழக்கு மகாணத்தில் ஜனநாயக அரசியல் இருப்பதை தான் முழுமையாக ஏற்றுக்கொள்வதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

(உ-8)

## ஆறுமுகநாவலர் நினைவுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். சைவபரிபாலன சபை நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் நினைவுவிழா எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சைவபரிபாலன சபைத் தலைவர் இ மகேந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்நிழ்வில் பிரதம விருந்தினராக இந்துசமய அலுவல்கள் விவகார அமைச்சின் யாழ். பிராந்திய அலுவலக உதவிப் பணிப்பாளர் சிவ. மகாலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

அருளுரையை நல்லைஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாச்சாரிய தேசிக சுவாமிகளும்வரவேற்புரையை ஆசிரியமணி அ. பஞ்சாட்சரமும் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து நாவலர் தினத்தையொட்டி நடத்தப்பட்ட கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு இடம்பெறவுள்ளது.

(உ-9)

## எச். ஐ. வி. தொற்றுக்கு 436 பேர் இலக்கு

(கொழும்பு)

1987ம்ஆண்டில் இருந்து இலங்கையில் எச்.ஐ.வி வைரஸ் தொற்றுக்கு 436பேர் இலக்காகி உள்ளனர் என எயிட்ஸ்நோய் ஒழிப்புத்திட்டத்தின் பணிப்பாளர் டாக்டர் நிலாந்தி அபயநாயக்கா தெரிவித்துள்ளார்.

இந்நோய் தொடர்பாக அவர்மேலும் கருத்துதெரிவிக்கையில், எச். ஐ. விவைரஸ் தாக்கத்தினால் நாட்டில் நூற்றுக்கு மேற்பட்டோர் இறந்துள்ளனர்.

ஆனாலும் ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து சுகாதார நடவடிக்கைகள் உயர்மட்டத்தில் உள்ளன.

இருந்தபோதிலும் இலங்கையில் குறைந்தளவு எயிட்ஸ் நோயாளிகளே உள்ளனர் என்பது குறித்து மனநிறைவு அடைந்துவிட முடியாது என்றுகுறிப்பிட்டுள்ளார்.

மேலும் உலகில் ஒவ்வொரு வருடமும் 14ஆயிரம்பேருக்கு இவ்வைரஸ் கிருமி தொற்றுவதாகவும் அவர்களில் பெரும்பாலானோர் அபிவிருத்தி அடைந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(உ-8)

## உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு மோட்டார் சைக்கிள்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களை பிரதிநிதித்துவப் படுத்தும் உறுப்பினர்களுக்கு மோட்டா சைக்கிள்களை வழங்குவதற்கு உள்நாட்டு அலுவல்கள் மாகாணசபைகள்மற்றும்உள்ளூர் அட்சிஅமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய மாநகர, நகர, பிரதேச சபைகளுக்கான உப தலைவர்கள் உட்பட ஏனைய உறுப்பினர்களுக்கும் இம் மோட்டார் சைக்கிளவழங்கப்படவுள்ளன.

உள்ளூராட்சி உறுப்பினர்கள் பலர்போக்குவரத்து கஷ்டங்களை எதிர்நோக்குவதாக சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு கிடைத்த முறைப்பாடுகளை அடுத்தே இந்நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

சுமார் 4ஆயிரம்உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கு இதற்கமைய கடன்அடிப்படையின்கீழ் இம்மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளதாகவும் இதற்கான விண்ணப்பங்கள் அவ்வவ் உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக கோரப்பட்டு அடுத்தவருடமுற்பகுதியில் மோட்டார் சைக்கிள்கள் வழங்கநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

(உ-8)

## இன்னும் சில தினங்களில் பாராளுமன்றம் கலைப்பு

### அனுரா எதிர்வு கூறுகிறார்

தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு இன்னும் சில தினங்களே இருப்பதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

தேசிய அமைப்பு ஒழுங்கு செய்திருந்த நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்கு எதிரான கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்:

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து பொதுஜன ஐக்கிய முன்னணியும் மக்கள விடுதலை முன்னணியும் தோழமையுடன் பேச்சுக்களில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

(உ- 8)

## ஒலிபெருக்கியின் சத்தத்தை குறைத்து பயன்படுத்துக

### யாழ் மாநகர சபை வேண்டுகோள்

யாழ். மாநகரசபைஎல்லைக்குட்பட்ட பொது இடங்கள், பொதுவீதிகள், விற்பனை நிலையங்கள், வீடுகளில் இயங்கும் வானொலி மற்றும் ஒலிபெருக்கிகளின் சத்தத்தை குறைத்துப் பயன்படுத்துமாறு யாழ். மாநகரசபை மக்களைக் கேட்டுள்ளது.

வானொலி மற்றும் ஒலிபெருக்கிகளின் சத்தம் அதியுச்ச நிலையில் இருப்பதால் மாணவர்கள் ஒரு மனதுடன் கல்வியில் ஈடுபட முடியாமல் இருப்பதுடன் பொதுமக்கள் அமைதியின்றி தொல்லைப்படுவதாக யாழ் மாநகரசபையின் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால்வானொலிமற்றும் ஒலிபெருக்கிகளின் ஒலியளவு 20டெசிபலுக்கு உட்பட்டதாக இருப்பதை பாவனையாளர் அனைவரும் உறுதிப்படுத்த வேண்டுமென்றும் கேட்கப்பட்டுள்ளது.

(இ)

## செய்தித் துளிகள்

### ஒளி விழா

(சண்டிலிப்பாய்)

யா சென்றர்ஆஸ்ரோ.க. த.க. பாடசாலையின் ஒளி விழா இன்று பி ப 2 மணிக்கு அதிபர் அருட்சகோதரிமே,கு. லடிஸ்லாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-258)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் இந்துக்கல்லூரியின் ஒளிவிழா இன்று மு. ப. 10.00 மணிக்கு செல்வன்த. நிக்ஸன் தலைமையில் இடம்பெறவுள்ளது;

நிகழ்வில் பிரதம விருந்தினராக உரும்பிராய் பங்குத்தந்தை அருட்திரு அன்ரனி பாலாவும், சிறப்பு விருந்தினராக சத்தோலிக்க பீடத்தலைவர் துரை ஆரோக்கிய நாதனும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ)

### மாவீரர்பெற்றோர் கௌரவிப்பு

(ஆனைக்கோட்டை)

சாவல்கட்டு ஜே/131கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர் நேற்று முன்தினம் மகாத்மா சனசமூக நிலையத்தில் கௌரவிக்கப்பட்டனர். (உ-20)

### தலைவர் தெரிவு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக மீண்டும் எஸ். சுந்தரலிங்கம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (உ-75)

### சிறுவர் பயிலரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக்கலாமன்ற கலைத்தூது மணிமண்டபத்தில் நாளை மாலை6 45 மணிக்கு சிறுவர் பயிலரங்கு இடம்பெறவுள்ளது. (உ-6,16)

### புலிகள் கோரவில்லையாம்

(கொழும்பு)

எந்தவொரு பாதுகாப்பு படையின் முகாமையோ, அதிரடிப்படை முகாமையோ, பொலிஸ் நிலையத்தையோ இடம்மாற்றும்படி விடுதலைப் புலிகள் அரசாங்கத்தை கேட்டிருக்கவில்லை என்று பாதுகாப்பு அமைச்சின் செய்தி வெளியீடு தெரிவிக்கிறது. அம்பாறை மாவட்டத்தின் பாதுகாப்பு உபகுழுவின் நவம்பர் 23 ஆம் திகதி சட்டத்தின் முடிவுகளைகொழும்பிலிருந்து வெளிவரும் ஒரு தமிழ் தினசரி திரித்து வெளியிட்டிருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்முனை வாடி வீட்டு கட்டிடத்திலிருந்து பொலிஸார் வெளியேற வேண்டுமென்று கேட்டிருக்கவில்லை. கட்டிடம் படையினரால் பாவிக்கப்படாமலிருப்பதால் அதனை உரிய உள்ளூராட்சி சபையிடம் கையளிப்பதென்றே தீர்மானிக்கப்பட்டது. திருக்கோயில் அதிரடிப்படை முகாமை வேறு ஒரு இடத்திற்கு மாற்றுவதென்று முன்னரே தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதனால் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்படும் என்று செய்திவெளியீட்டில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அத்துடன், வீதிகளில் குறுக்கே அமைக்கப்பட்டிருக்கும் வாகனங்களின் வேகத்தை தடுப்பதற்கான வரம்புகள் முகாம்களுக்கருகேஇருப்பின் அகற்றுவதில்லை எனவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. (பி)

### சைக்கிள்கள் ஒப்படைப்பு

(மந்திகை)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடமையாற்றும் குடும்ப நல உதவியாளர்களுக்கு வழங்கவென யு எஸ்.எச்.சி ஆர் நிறுவனம் 10 சைக்கிள்களை சுகாதாரத்திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளது. (உ-23)

### நாரந்தனை பாடசாலையில் திருட்டு

(ஊர்காவற்றுறை)

நாரந்தனை றோ.க.மகா வித்தியாலய சொத்துக்கள் அண்மையில் திருட்டுப் போயுள்ளன.

அதிபரின் அறை திறந்து காணப்பட்டதாகவும் அங்கு போய்ப் பார்த்த போது றேடியோ, தட்டச்சு இயந்திரம் ஆகியவை காணாமல் போய் இருப்பதுதெரியவந்ததாகவும் பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-75)

### மது விழிப்புக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கியூடெக் ஏற்பாட்டில், மது விழிப்புணர்வுக் கருத்தரங்கு எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை கொய்யாத் தோட்டம் பகுதியிலும், மறுநாள் கரவெட்டி ராஜகிராமத்திலும் இடம்பெறவுள்ளது. (உ-16,6)

### ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடத்தி வரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இம்முறை நாவலருடைய தமிழ்ப்பணி குறித்து யாழ். பல்கலைக் கழக மாணவன் ச. பாலசண்முகனும், நாவலருடைய சமுதாயப்பணி பற்றி ஆசிரியர் ச. லலீசனும், நாவலருடைய சமயப் பணி குறித்து சைவப்புலவர் கந்த சத்தியதாசனும் நாவலருடைய பாரம்பரியம் எனும் பொருளில் சைவப்புலவர் ஏ. அனுஷாந்தனும் சொற்பொழிவாற்றவுள்ளனர். (உ)

### மீளக்குடியமர்வு கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை கிழக்குப் பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள 108 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு ரூபா 15 ஆயிரம் விரைவில் வழங்கப்படவுள்ளது. (உ)

# சமுதாய மாற்றங்களை ஏற்படுத்தும் சிறந்த ஊடகம் திரைப்படம்

## தென்மராட்சி பிரதேச செயலர் ஸ்ரீனிவாசன்

(யாழ்ப்பாணம்)

சமுதாயத்தில் காணப்படும் நம்பிக்கை, நடத்தைகள், சிந்தனை என்பவற்றை உணர்வு ரீதியாக வெளிப்படுத்தும் ஆற்றல் திரைப்படக் கலைக்கே அதிகம் உண்டு. மக்களின் கலாசாரம், சமயம், மொழி போன்ற விடயங்களில் அதிகம் ஆதிக்கம் செலுத்தும் கலைவடிவமாகவும் திரைப்படம் உள்ளது.

சலனசித்திரம் திரைக்கலை அமைப்பின் தென்மராட்சிக் கிளையின் ஏற்பாட்டில் யா/மீசாலை வீரசிங்கம்மகாவித்தியாலயத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை கிளைச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற திரைப்பட தொழில்நுட்பப் பயிற்சிப்பட்டறை ஆரம்பவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

திரைப்படத்தை நல்ல முறையில் பயன்படுத்தி சமுதாய மாற்றங்களை ஏற்படுத்த நாம் முயல வேண்டும்.

திரைப்படத்தைநல்லமுறையில் பயன்படுத்தி சமுதாய மாற்றங்களை ஏற்படுத்த நாம் முயல வேண்டும்.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் தமிழ் சினிமாத்துறை வளர முடியாமல் இருப்பதற்கு அரசஉதவிகள் இத்துறைக்குக் கிடைக்காமையே முக்கிய காரணமாக இருக்கிறது. ஆனால், எமது பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் திரைப்படப் பிரிவினர் போராட்ட வரலாறு மற்றும் தாக்குதல்நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் மக்கள் எழுச்சியை ஏற்படுத்து முகமாகவும் ஆக்கிய வெளியீடுகள் நல்ல தரமுள்ளவையாக அமைந்துள்ளன.

தென்னிந்திய தமிழ்த் திரைப்படங்களுக்குச் சவாலாக எமது ஈழத்தமிழ்க்கலைஞர்களாலும் இத்துறையில் முன்னேற முடியும் என்பதனையே இது காட்டுகிறது.

திரைப்படங்களில் பேசும் மொழியோடு பேசாத மொழியும் கலந்துள்ளதனை அறியாதவர்களே, அவற்றை ஒரு பொழுதுபோக்கு சாதனமாகக் கருதுகிறார்கள். ஆரம்ப காலத்தில் தென்னிந்தியத் திரைப்படங்கள் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்புவதற்குப் பெரிதும் உதவின. திரைப்படத்திலுள்ளதொழில்நுட்ப விடயங்களை அறிந்தவர்களும் அறிய விரும்புபவர்களும் அதை ஒரு ஆராய்ச்சித்துறையாகக் கருதி வளர்த்து வருகிறார்கள்.

ஆதிகால மனிதனின் தேவைகள் குறைவாக இருந்தன; மக்கள் தொகைபெருகிய போது, பிறரைச்சார்ந்து வாழ வேண்டியதேவை ஏற்பட்டது. கருத்துப் பரிமாற்றம் இதற்குத் தேவையாக இருந்தது. அதற்கு மொழி வடிவம் கொடுக்க முற்பட்டபோது வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் மக்களைத் தேடிவந்தன.

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, கணனி, வலைப்பின்னல் வரிசையில் திரைப்படமும்அந்தஇடத்தை வகித்துவருகிறது. கலைகள் ஒருபோதும் அழிவதில்லை. அவைகாலத்துக்குக்காலம் புதுவடிவைப் பெற்றுக்கொள்கின்றன என்று குறிப்பிட்டார். (உ)

# யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி முதுமாணிக் கற்கை நெறி 54 பேர் தெரிவு செய்யப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தில் 2002/ 2003 கல்வியாண்டில் கல்வி முதுமாணிக் கற்கை நெறிக்கு 54 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான கற்கை நெறி டிசம்பர் 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பெயர்கள் வருமாறு; திருமதி எ. ஆரோக்கிய நாதன், எம். ஆனந்தராஜா, எஸ். கே. பிகுறடோ, ரி. பங்கையற்செல்வன், எஸ் தியாகலிங்கம், எஸ். பத்மசீலன்.

எஸ். சண்முகநாயகம், திருமதிசி. விஜயசந்திரன்அன்ரனீஸ், திருமதி ரி தயாநாதன், திருமதி சி. எம். இ. எஸ். நாகேஸ்வரன், திருமதி டி. டி. எம் விக்கரலம்பேட், கே. முருகவேள், எம். கிறிஸ்ரியன், என். ஞானவேல், பி சற்குணநாதன், கே.சின்னராஜா, ஜே. கிறிஸ் கந்தவேள், எஸ். விஜேந்திர சர்மா, ஓ. விஜயரட்ணம், எஸ். சிறிதரன், ஜே. சத்தியபிரகாசம், என். தெய்வேந்திரராஜா, திருமதி எம். இதயசிவதாஸ், எவ். ரி. அல்பேட், கே. சசிதரன், எம். சிவநேசன், ஆர். இராயமகேந்திரன், எஸ். திருநாவுக்கரசு, ரீ. தனேஸ்வரன், வீ. ஞானகாந்தன்,

திருமதி எம். விவேகானந்தன், திருமதி பி. ஐ. குறூஸ் திருமதி எஸ் ஜோசப், திருமதி எஸ். நாகராசா, கே. கிருஸ்ணயோகன், கே. குலசேகரம், கே. திலகரெட்ணம், ஆர். சத்தியேந்திரப்பிள்ளை, திருமதி யீ. சிவசுந்தரம், செல்வி எஸ். சிவராஜா, கே. செல்வநாயகம், செல்வி எம். சின்னையா, ஜீ. ரட்ணசிங்கம், கே. அருந்தவராஜா, கே. கனகராசா.

எம். கௌரிகாந்தன், எஸ். தேவசகாயம், திருமதி பி.சுப்பிரமணியம், திருமதி எஸ். சிவநாதன், செல்வி பி. சிவச்சந்திரா, கே சத்தியசீலன், எம். இக்னீசியேஸ், எஸ். பாஸ்கரன், எஸ் தேவமனோகரன். (உ-7)

# ஹெய்ரோவில் கைதான இலங்கையர் 149 பேரும் நாடு கடத்தப்பட்டனர்

(கொழும்பு)

இத்தாலியில் சட்டவிரோதமாக குடியேற முற்பட்ட 149 இலங்கையர்கள் நேற்று நாடு கடத்தப்பட்டனர்.

இலங்கையில் இருந்து சிறு படகு ஒன்றில்அவர்கள் அனைவரும் இத்தாலி செல்ல முற்பட்டபோது எகிப்தின் ஹெய்ரோ நகரத்துக்கு அருகில் இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர்.

எகிப்து நாட்டு அதிகாரிகள் அங்குள்ள இலங்கைத் தூதரகத்துடனும், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புபணியகத்துடனும் தொடர்பு கொண்டதை அடுத்தே இவர்கள் அனைவரும் நேற்று நாடு கடத்தப்பட்டனர். (உ-8)

# பிரதமர் ரணில் ஒஸ்லோவில் பாலசிங்கத்தை சந்தித்து பேசியது தண்டனைக்குரிய குற்றம்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் அரசியல் பிரமுகர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர்களையும் உறுப்பினர்களையும் இரகசியமாகசந்தித்துபேச்சுவார்த்தை நடாத்திவருகின்றனர்ஆனால் நாட்டின் முக்கிய தலைவர்களில் ஒருவரான பிரதமர் ரணில்விக்கிரமசிங்க அவ்இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் சந்தித்து இருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளரும் பாராளுமன்றஉறுப்பினருமான விமல வீரவன்ச தெரிவித்துள்ளார்.


கொழும்பில் நடைபெற்ற அரசாங்கத்தினதும் விடுதலைப்புலிகளினதும் சமாதான நடவடிக்கைகளுக்குஎதிர்ப்பு தெரிவிக்கும் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அக்கூட்டத்தில் மேலும் தெரிவிக்கையில்; தமிழீழவிடுதலைப்புலிகளின் தத்துவ ஆசிரியர் பாலசிங்கத்தைசந்தித்ததற்காகபிரதமர் ரணிலை மக்கள் நீதிமன்றத்தில் முன்நிறுத்தி தண்டனை வழங்க வேண்டும்.


கடந்த ஒருவருடகாலத்தில் தமிழீழவிடுதலைப்புலிகளுடன் நேரடித் தொடர்புகள் எவற்றினையும் மேற்கொண்டிராத அரசு தற்போது நேரடிச்சந்திப்புக்களையும் ஏற்படுத்த தொடங்கியுள்ளது.

இதன்மூலம் நாட்டை இருகூறாக்கி, தமிழீழவிடுதலைப் புலிகளுக்கு பகிர்ந்து கொடுக்கும் அரசின் உள்ளார்ந்தத் திட்டம் வெளிப்படையாகிறது எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

# இதயத்தை நெகிழவைத்த மாவீரர் நாள் நிகழ்வுகள்







படங்கள்: ஜெயகாந்தன் டானியல்

# இன்று ஒரு தகவல்

## குழந்தை சுபாவம்

ஒருவர் தன்னுடைய சிநேகிதரை கடைத்தெருவில் சந்தித்த போது குடும்ப விஷயங்கள் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தார். கடைசியாக கடைக்குட்டி பையன் எப்படி இருக்கிறான்? என்று கேட்டார்.

அவன் தான்சார் எனக்குப் பெரிய தலைவலி! வால் இல்லாத குறை அவனுக்கு! ஏதாவது குறும்பு பண்ணிக்கிட்டே இருப்பான் என்ன செய்வது என்று தெரியவில்லை.. என்று இவர் புலம்ப ஆரம்பித்தார்.

பொதுவாககுழந்தைகளுக்கு நல்ல பழக்க வழக்கங்களை சற்றுக் கொடுப்பது பெற்றவர்களுடைய பொறுப்புசிறிய வயதில் அவனை உதைக்கச் சொல்லி வேடிக்கை பார்க்கிறது அவன் பெரியவனாகி உதைக்க வரும்போது வருத்தப்படுவது! இதற்கு யார் சார் பொறுப்பு?

சின்னப் பிள்ளைகளுக்கு திட்டுவது எப்படி என்று சொல்லிக் கொடுத்து அவர்கள் திட்டும் போது அதை ரசிக்கிற பெரியவர்கள் இப்பவும் எத்தனையோ பேர் உண்டு அந்த சின்னப்பிள்ளை பெரியவனாகி அதற்கு பின்பு அதே வார்த்தையை சொல்லி அப்பாவைத் திட்டினா...

பெரியவர்களை மதிக்கத்தெரியாது என்று சொல்வது இதுதான் நமது வழக்கம்.

குழந்தைகள் உடம்பு நன்றாக இருக்க வேண்டும்என்று தான் பெற்றோர்கள் அக்கறை செலுத்துகிறார்கள்.

மனதும் நன்றாக இருக்க வேண்டும் என்று நினைத்து அதற்கு ஏற்றமாதிரி நடப்பதில்லை.

இப்போது உள்ள பலகுடும்பப்பிரச்சினைகளுக்கு இதுஒரு முக்கியமான காரணம்.

ஒருகுழந்தைக்குநல்லபழக்க வழக்கத்தை கற்றுக் கொடுப்பது எப்படி? அது ஒன்றும் பெரிய வேலையில்லை கெஞ்சம் கவனம்வேணும் அவ்வளவு தான் ஒரு குழந்தை நல்ல விதமா நடந்தால் உடனே அதைப் பாராட்ட வேண்டும். சிரித்த முகத்துடன் தட்டிக் கொடுக்க வேண்டும் அவன் ரொம்ப நல்ல பையன் என்று நீங்கள்நினைப்பதை அவன் புரிந்து கொள்ளும்படி நீங்கள் ஏதாவது செய்யனும். ஆனா நாம் எதிர்மறையாக நடந்து கொள்கிறோம் அதை பாராட்டுவதில்லை. ஆனால் ஏதாவது தப்பு செய்தால்மட்டும் உடனே கண்டிக்கிறோம்

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

# பருத்தித்துறை கொட்டடி மீனவர்கள், மீளக் குடியமர்த்தக் கோரி இன்று பிரதேச செயலகம் முன்பாக மறியல்

(திருநெல்வேலி)

பருத்தித்துறை கொட்டடிப் பகுதியில் வசித்த குடும்பங்களை, மீண்டும் அங்கு சென்று குடியமர அனுமதி மறுக்கப்பட்டிருப்பதை கண்டித்து இன்று பருத்தித்துறை பிரதேச செயலகம் முன்பாக மறியல் போராட்டம் ஒன்றை கடற்றொழிலாளர்கள் நடத்தவுள்ளனர்.

பருத்தித்துறை கடற்றொழிலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் இப் போராட்டம் இடம் பெறவுள்ளது.

பருத்தித்துறையின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள எமது குடியிருப்புக்கள் இராணுவ முகாமிற்குள் அமைந்துள்ளதனால் வன்னியில் இருந்து மீள்குடியமருவதன் பொருட்டு இங்கு வந்துள்ள எமக்குப்படையினரால் குடியமர அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது.

இதனை எதிர்த்தே நாம் போராட்டம் ஒன்றை இன்று நடத்த முடிவு செய்துள்ளோம் என சம்பந்தப்பட்ட மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கடந்த 18 ஆம் திகதி இது சம்பந்தமான கடிதம் ஒன்றை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு சம்பந்தப்பட்டவர்கள் அனுப்பிவைத்துள்ளனர்.

இது இவ்விதமிருக்க, மேற்படி பகுதி மக்களை இது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தவென அண்மையில் அழைத்த 55 வது படையணி, இறுதியில் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தாது திருப்பியனுப்பியது தெரிந்ததே. (உ-43)

## வண்ணை அஞ்சலகம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

சிவன் பண்ணை வீதியில் இதுவரை காலமும் இயங்கி வந்த வண்ணார்பண்ணை அஞ்சல் அலுவலகம் எதிர் வரும் டிசம்பர் மாதம் 12 ஆம் திகதி முதல் இலக்கம் 40,நாவலர் வீதியில் உள்ள புதிய கட்டடத்தில் தொலை நகல், தொலைபேசி வசதிகளுடன் இயங்கவுள்ளது. (உ)

## தீவகத்தில் சமுர்த்தி வங்கியாளர் பரீட்சை முடிவுகள் வெளியாகவில்லை

(ஊர்காவற்றுறை)

நெடுந்தீவு, ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகங்களுக்கான சமுர்த்தி வங்கியாளர் போட்டிப் பரீட்சை முடிவுகள் இதுவரை வெளியிடப்படவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது.

குடாநாட்டில் உள்ள ஏனைய பிரதேச செயலகங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 79சமுர்த்தி வங்கியாளர்கள் ஒருவாரப் பயிற்சி ஒன்றுக்காக எம்பிலிப்பிட்டிய சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்துபாதிக்கப்பட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் பெருத்தமாற்றம் வெளியிட்டுள்ளனர். (உ-75)

## இராசி பலன்

28-11-2002
(கார்த்திகை 12, வியாழன்)
நவமி பி இ 3.00 வரை
பூரம் மு இ 8.48 வரை
இராகுகாலம்- 1.43-3 13
நல்ல நேரம்- 7.43-9.13

**மேடம்**
குடும்பக் கவலை, தொழில் கஷ்டம், காரிய தாமதம், பெரியோர் மனஸ்தாபம்.

**இடபம்**
தாய்வழி உறவு, மாணவர் கல்வியில ஆர்வம், வாகன சுகம், காரியதாமதம்.

**மிதுனம்**
வாக்கு மேன்மை, குடும்ப மகிழ்ச்சி, எடுத்த கருமங்கள் நிறைவெறும, தனவரவு.

**கடகம**
திடீர் நன்மை, வாக்கு கலகம், ஆழ்ந்த சிந்தை, பொருள விரயம்.

**சிங்கம்**
ஜனவசியம், உறவினர் சந்திப்பு, முயற்சி கைகூடும், கற்பனை மிகுதி.

**கன்னி**
சகோதரர் உதவி, பிரயாணம், காரிய அலைச்சல், நித்திரைக் குறைவு.

**துலாம்**
பெருமையடைதல், குடும்ப நன்மை, தர்மம், காரிய அனுகூலம்.

**விருச்சிகம்**
உற்சாகம், பிறர் ஒத்தாசை, செய்தொழில் முன்னேற்றம், முயற்சி கைகூடும்.

**தனுசு**
ஆனறோர் மதிப்பு, வீண் பயம, பிரயாணம், காரிய தாமதம்.

**மகரம்**
வீண் தொல்லை, உடல் நலக்குறைவு, முயற்சி தடங்கல், போசன சுகம்.

**கும்பம்**
பிரயாணம், போசன சுகம், கௌரவமான நிலை, முயற்சி கைகூடும்.

**மீனம்**
நோய் குணமடையும், தனவரவு, காரிய நன்மை, இனிய சம்பவம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# அரச பணியாளர் தனியார் நிறுவனங்களில் பணியாற்ற அனுமதி

(கொழும்பு)

அரசசேவை உத்தியோகத்தர்களுக்குதமதுகடமைநேரத்தின் பின்பு தனியார்துறை நிறுவனங்களில் கடமையாற்ற அனுமதிவழங்க நடவடிக்கை எடுத்து வருவதாக அரச நிர்வாக முகாமைத்துவ மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் வஜிரஅபேயவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரச சேவையிலுள்ள அனைத்து உத்தியோகத்தர்களையும் நாட்டின் பொருளாதாரத்தின் பங்குதாரர்களாக ஆக்கிக்கொள்ளும் நோக்கத்திற்காகவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அரசசேவையாளர்களுக்கான தாபனக்கோவையை திருத்தம் செய்வதற்கும் திட்டமிட்டுள்ளதாகவும் அவர்தெரிவித்துள்ளார். (உ-3)

# டிசம்பர் 3ஆம் திகதி பிரதமர் ஜப்பான் விஜயம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் 3ஆம் திகதி 5 நாள்விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஜப்பான் பயணமாகவுள்ளார்.

ஜப்பான் செல்லும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அந்நாட்டுப்பிரதமர் யுனிசிரோகொய்சுகி வெளிவிவகார அமைச்சர் ஜோரிகோ சுவாயுசி ஆகியோரைச் சந்தித்து பேசவுள்ளார்.

ஜப்பானியஅரசு இலங்கையில் நடைபெற்று வரும் சமாதான நடவடிக்கைகளுக்குப்பூரண ஆதரவு வழங்கி வருவதுடன் இலங்கைக்கான உதவி வழங்கும் நாடுகளின் பட்டியலில் யப்பான் பெரும் பங்கு வகிக்கிறது.

இதேவேளை, இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இரண்டாவது மாநாடுஅடுத்த ஆண்டு தொடக்கத்தில் ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் இடம் பெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

# தென்பகுதியில் இருந்து அரிந்தமரங்கள் எடுத்துவர மரக். கூ. தா. நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டுமக்களின் பாவனைக்கென ஒருதொகுதி அரிந்த மரங்கள் அடுத்தவாரம் தென்னிலங்கையில் இருந்து எடுத்துவரப்படவுள்ளதாக அரசாங்க மரக்கூட்டுத்தாபன யாழ் பிராந்திய முகாமையாளர் க.விஜயரத்தினம் தெரிவித்தார்.

எடுத்துவரப்படவுள்ள அரிந்த மரங்கள் சட்டநாதர் வீதியில் உள்ள அரசமர விற்பனை நிலையம்மூலம் விநியோகிக்கப்படவுள்ளதாகவும்; விற்பனையை விரிவுபடுத்தும் வகையில் வல்வெட்டித்துறையில் அடுத்தஆண்டு மர விற்பனை நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர்மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை யாழ்குடாநாட்டுமக்களுக்கு விநியோகிப்பதற்கென நாற்றுமேடையில் சமண்டலை, மலைவேம்பு சவுக்கு, காட்டுத் தேக்கு போன்றமரக்கன்றுகள்வளர்க்கப்படுவதாகவும் பிராந்தியமுகாமையாளர் தெரிவித்தார். (உ-9)

பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு மிரட்டல்

# நிஹால் கருணாரட்னா காசுப்பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்காவின் பாதுகாப்பு பிரிவின் முன்னாள் பணிப்பாளர்பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் கருணாரட்னாவுக்கு எதிராக கண்டி உயர் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் கமலசபேசன் சார்பில் அரச தரப்பு சட்டத்தரணி திஸ்ஸ வர்ணகுல இக் குற்றப்பத்திரிகையை கண்டி உயர்நீதிமன்ற நீதிபதி சிகல் டி ஒப்று முன்னிலையில் தாக்கல் செய்தார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடை பெற்ற பொதுத் தேர்தலின் போது ஹங்குராங் கெட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எச். எம். செனிவிரட்னவுக்கு இவர் கொலை மிரட்டல்விடுத்ததாக குறிப்பிட்டே மேற்படி குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனுவை விசாரணைக்கு எடுத்த நீதிபதி நிஹால் கருணாரட்னாவை 5 ஆயிரம் ரூபா காசுப்பிணையில் செல்ல அனுமதித்ததுடன், வழக்கு விசாரணையை அடுத்த வருடம் ஜுன் மாதம் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

நிஹால் கருணாரட்னாமீது பலவேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருவதும் தெரிந்ததே. (உ-8)

# நாவலர் குருபூசைத்தின போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசைத் தினத்தை யொட்டி யாழ். சைவ பரிபாலனசபையினரால் மாணவர் மட்டத்தில் நடத்தியபேச்சுப் போட்டிமற்றும் கட்டுரைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக முறையே தங்கம், வெள்ளி வெண்கலப் பதக்கங்களைப் பெறவுள்ளவர்களின் பெயர்கள் வருமாறு

**பேச்சுப்போட்டி**

மேற்பிரிவு

முதலாம்இடம்; —
க. கலையரசி யா-ஸ்கந்தவரோதயாக்கல்லூரி

இரண்டாம்இடம்
கு. குருபரன் யாழ். இந்துக் கல்லூரி

மூன்றாம்இடம்
பா. மகியினி தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி

மத்தியபிரிவு

முதலாம்இடம்
க. கலையரசி யா-அச்சுவேலி புனித திரேசாமகளிர் கல்லூரி

இரண்டாம்இடம்
ம. சுபாதினி யா- பெரியபுலம் மகாவித்தியாலயம்

மூன்றாம்இடம்
தெ. ஹர்சளி யா- மத்திய கல்லூரி

கீழ்ப்பிரிவு

முதலாம்இடம்
ப. டிலானி யா-சாவகச்சேரி (முதலாம்பரிசு)

இரண்டாம்இடம்
யோ. கார்த்திகா யா-மகாஜனக்கல்லூரி

மூன்றாம்இடம்
க. விர்ணன் யா-இணுவில் மத்தியகல்லூரி

**கட்டுரைப்போட்டி**

முதலாமஇடம்-
பா. நர்மதா மல்லாகம் மகாவித்தியாலயம்

இரண்டாம்இடம்
கு குருபரன் யா-இந்துக் கல்லூரி

மூன்றாம்இடம்
மு. ராதிகா யா-இந்து மகளிர்கல்லூரி

போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10.00 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளதாக சைவபரிபாலனசபை தேர்வுச் செயலாளர் வ. கந்தசாமி அறிவித்துள்ளார். (உ-9)

# பட்டப்பின் கல்வி டிப்ளோமா
# வவு. பீடத்திற்கு 50 பேர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வவுனியா பீடத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (பகுதி நேரம்) கற்கை நெறிக்கு 2002/2004 கல்வியாண்டில் 50 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் பெயர்கள் வருமாறு;

திருமதி எஸ். றமேஸ், செல்வி பி. வேலுப்பிள்ளை, வண. எஸ். பஸ்தியாம்பிள்ளை, என். சக்திவேல், செல்வி கே. திருக்குமரன், செல்வி எஸ். தனபாலசிங்கம், யே. ஷிப்லி, வை. உதயகுமார், எஸ். சிறிரங்கநாதன், ரீ. உதயசூரியன், ரீ. வசந்தன், செல்வி எஸ். குருகுலசிங்கம், ரீ. மனோராஜ், எஸ். பிரபாகர் ஏ. ஆர். தாசகுமாரன்.

செல்வி எ. அருளானந்தம், ரீ. உதயகுமார், செல்வி எஸ். கந்தையா, ஆர். கோகுலதாஸ், செல்வி எஸ். ராமதாஸ், எஸ். சசிகரன், ஆர். நாகேஸ்வரன் ரீ. சுகந்தன், திருமதி ஆர். தங்கேஸ்வரன், திருமதி எஸ். ஜெயகாந்தன், பி. கிருஷ்ணகுமார், எஸ். ஞானநந்தன் வண. எ. செபஸ்தியாம்பிள்ளை, எஸ். சற்குணேஸ்வரன், திருமதி எஸ். சிவநாதன், எ. டான்சன் ராஜ்குமார் ஆர். கங்கேஸ்வரன்,

செல்வி ரீ. விநாயகமூர்த்தி, கே. எஸ். பிரபாகரன், எ. சோதிநாதன், திருமதி ரீ. மனோகரன், வி. உதயகுமார், கே. இரம்பநாதன், யே. யூலின்குறூஸ், எம். மகேந்திரன், திருமதி எம். முகுந்தன், திருமதி எஸ். தர்மலிங்கம், கே. ஜெயரட்ணா, வை. செந்தில்ராஜ், கே. தேவசீலன், செல்வி எ. பரமசாமி, செல்வி கே. செல்லத்துரை. வி. புஷ்பராசன், எம். சுபாஸ், ரீ. சென்தூரன். (உ-7)

## அரும்பொருள் விழிப்பு கட்டுரைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அரும் பொருள் தொடர்பான விழிப்புணர்வை வளரும் மாணவ சமூகத்திடம் ஏற்படுத்தும் முகமாக யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறை கலை வட்டம் கட்டுரை சுவரொட்டிப் போட்டிகளை மாணவர் மட்டத்தில் நடத்தவுள்ளது.

இப் போட்டிகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

போட்டிக்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் தினம் ஜனவரி மாதம் 10 ஆம் திகதியாகும். (உ)

## வட-கிழக்கு பிரதேச பாதுகாப்பு நிலை குறித்து 3 மணி நேரம் விவாதம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரதேசங்களின் பாதுகாப்பு நிலைவரம் குறித்து பாராளுமன்றத்தில் 3 மணி நேரம் விவாதம் நடத்துவதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இப்பிரதேசங்களின் பாதுகாப்பு நிலைவரங்கள் குறித்து பாராளுமன்றில் விவாதிக்கப்படவேண்டும் என எதிர்க்கட்சிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே அரசு இதற்கு இணங்கியுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமையன்று கட்சித் தலைவர்களின் கூட்டஒத்திவைப்பு நேரத்தில் இவ்விவாதத்தை நடத்துவதென கட்சித் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

அன்றைய தினம் சபைநடவடிக்கைகள் யாவும் இரவு 9.00 மணி வரை நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-8)

## அடிப்படை வசதிகளின்றி 600 குடும்பங்கள் அல்லல்

### மனித உரிமை ஆ.கு. இல் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

அராலி ஊரத்திக் கிராம நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள குடும்பங்கள் தமது நிலை குறித்து யாழ். மனித உரிமை ஆணைக்குழுவின் இடம் பெயர்ந்தோர் மனித உரிமை நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளன.

மேற்படி நலன்புரி நிலையத்தில் ஏற்கனவே 200 குடும்பங்களும், ஏ-9 தரைவழிப் பாதையூடாக வந்த 400 குடும்பங்களுமாக தற்போது மொத்தம் 600 குடும்பங்கள் தங்கியுள்ளன.

இருப்பினும், எந்த வொரு அடிப்படை வசதிகளும் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை.

குடிநீர் வசதியோ, ஏற்ற குடியிருப்புவசதியோ எதுவுமே எமக்குக் கிடையாது.

தற்போதைய மாரி காலத்தில் பல்வேறு தொற்று நோய்களை நாம் எதிர் கொண்டுள்ளோம் என அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-6,16)

## தென்னிந்திய திரைப்படங்களுக்கு சவால்விடும் ஈழத்து திரைப்படத்துறை

### கருத்துப் பட்டறையில் பாராட்டு

(தென்மராட்சி)

தென்னிந்திய தமிழ்த் திரைப்படங்களுக்குச் சவாலாக எமது ஈழத்துக்கலைஞர்களாலும் திரைப்படத்துறையில் முன்னேறமுடியும் என்பதை தமிழீழ விடுதலைப்புலிகளின் திரைப்படப்பிரிவினர் நிரூபித்து வருகின்றனர் என்பது எமக்கு பெருமையாகவுள்ளது.

இவ்வாறு தென்மராட்சி பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் சலனசித்திரம் அமைப்பினால் நடத்தப்பட்ட திரைப்படத் தொழில்நுட்பப் பயிற்சிப் பட்டறையின் ஆரம்பவிழாவில் பிரதம விருந்தினராகப் பங்குகொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

தென்மராட்சி கிளைச்செயலாளர் செல்வி ச. சுவர்ணா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதேச செயலர் தொடர்ந்து குறிப்பிடுகையில்;

சமுதாயத்தில் காணப்படும் நம்பிக்கைகள் நடத்தைகள், சிந்தனைகள் போன்றவற்றை உணர்வுரீதியாக வெளிப்படுத்தும் ஆற்றல் கலைகளுக்குள்ளே திரைப்படத்திறகே அதிகம் உண்டு. மக்களின் கலாசாரம், சமயம், மொழி போன்ற விடயங்களில் அதிக ஆதிக்கம்செலுத்தும் கலைவடிவமாக திரைப்படம் திகழ்கின்றது.

இந்நிகழ்வில் பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசலை விரிவுரையாளர் க. தர்மராஜா, வித்தியாலய அதிபர் கு. சிவானந்தம் சலனசித்திரம் பிரதம அமைப்பாளர் க. தேவதாசன் யாழ். மாவட்டச் செயலாளர் சத்தியமூர்த்தி ஆகியோரும் உரையாற்றினர். (பி-77)

## பத்திரிகையாளர் சங்கம்

(தென்மராட்சி)

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின்மாதாந்தக் கூட்டம் எதிர்வரும் முதலாம் திகதி காலை 9.30 மணிக்கு கந்தர் மடத்திலுள்ள செயலகத்தில் நடைபெறவுள்ளது. (பி-77)

## குழுக் கூட்டம்

(தென்மராட்சி)

அறவழிப் போராட்டக்குழுவின் இயக்குநர் சபைக் கூட்டம் தலைவர் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தம் தலைமையில் எதிர் வரும் 30 ஆம் திகதிமுற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது. (பி-77)

## வைத்தியசாலை நலன்புரிச் சங்கம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி மாவட்டவைத்தியசாலைக்கான நோயாளர் நலன்புரிச் சங்கத்தினை புனரமைப்புச்செய்துஇயங்கச் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

முன்பு இங்கு இயங்கியநலன்புரிச்சங்கமும் இடப்பெயர்வு காரணமாக இயங்க முடியாமல் போனமை பற்றித்தெரியவருகின்றது. (பி-77)

## நிதிப்பிரிவு உறுப்பினர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கொழும்புத் தலைமையக நிதிப்பிரிவு உறுப்பினராக, யாழ். கிளையின் முன்னாள் உப தலைவரும், வடக்கு கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளருமான கு. பாலகிருஷ்ணன் நியமிக்கப்பட்டுள்ளார். (உ)

## நாடகப் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக்கலாமன்ற நாடகப் பயிலக மாணவர்களுக்கு இரு நாள் பயிற்சிப் பட்டறையை நடத்துவதற்கென சிங்களக் கலைஞரான ஜெரோம் டி சில்வா யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் யாழ். மறைக்கல்வி நடு நிலையத்தில் இப்பயிற்சிப் பட்டறை இடம்பெறவுள்ளது. (உ-16,6)

## கரையோரப் பகுதிகளுக்கு 24 மணிநேர மின்சாரம்

(மந்திகை)

வடமராட்சிப்பிரதேசத்தின் கரையோரப் பகுதிகளுக்கு விரைவில் 24 மணிநேர மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது சுப்பர்மடம், பொலிகண்டி, தொண்டைமானாறு ஆகிய பகுதிகளுக்கு மின்பிறப்பாக்கிமூலம் சுழற்சி முறையில் மின்சாரம் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (உ-23)

## நெல்லியடியில் டெங்கு நுளம்புஒழிப்புநடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் முற்பகல் மற்றும் பிற்பகல்வேளைகளில் புகையூட்டல் மூலம் டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கை இடம் பெறுவதுடன். இதற்கு வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேசசபையும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றது. (உ)

## விமானக் கொள்வனவில் மோசடி இடம்பெற்றதா?

### விசாரணை ஆரம்பமானது

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் இலங்கை விமானப்படையின் விமானக் கொள்வனவுகளில் பல கோடி ரூபா மோசடிகள் இடம்பெற்றுள்ளதா என்பது தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த 5 வருடத்தில் விமானப்படை 22 ஹெலிகொப்டர்களையும் 3 விமானங்களையும் கொள்வனவு செய்துள்ளது.

இக் கொள்வனவுகளில் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக கிடைக்கப்பெற்ற தகவல்களை அடுத்தே குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக திணைக்கள சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக விமானப்படையின் சிரேஷ்ட அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

இலங்கைவிமானப்படைக்கு சி என் 30 ரக விமானங்கள் மூன்றைக் கொள்வனவு செய்தமை குறித்து விசேடமாக ஆராயப்படும் எனவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (உ-8)

## செம்மணிப்புதைகுழி வழக்கு புலன்விசாரணை அந்தரங்க அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் யாழ். மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் கைது செய்யப்பட்டு காணாமல் போய் எலும்புக்கூடுகளாக மீட்கப்பட்ட செம்மணிப் புதைகுழி வழக்கின் புலன் விசாரணைகள் பற்றிய அந்தரங்க அறிக்கை நேற்று முன்தினம் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் இவ் அறிக்கையை சமர்ப்பித்தது – இப் புதைகுழி தொடர்பான புலன் விசாரணைகள் தொடர்ந்தும் நடை பெற்றுவருவதாக தெரிவித்துள்ளனர்.

புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட எலும்புகள் தொடர்பான மரபணு பரிசோதனையின் அறிக்கைகள் யாவும் மேலதிக பரிசீலனைக்காக இந்தியாவின் ஹைதராபாத் ஆய்வுகூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து இன்னமும் அறிக்கைகள் கிடைக்கவில்லை எனகுற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இப்புதை குழி தொடர்பான விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் அவரது ஆலோசனையின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தொடரும் எனவும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்

குற்றப்புலனாய்வுப்பிரிவினர் விசாரணையின் முன்னேற்றம் குறித்து அறிவிக்க வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (உ-8)

## நுளம்பு வலைகளுக்கு பேமத்திரின் தோய்த்தல்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி பொதுச்சுகாதாரப் பரிசோதகர்பிரிவில் நுளம்பு வலைகளுக்குப்பேமத்திரின் மருந்துதோய்த்தல் நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

இந்நடவடிக்கையானது இன்று வதிரிச்சந்தியில்உள்ள பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பணிமனையிலும் நாளை வெள்ளிக்கிழமை கரவெட்டி தச்சை ஐங்கரா சனசமூக நிலையத்திலும் இடம்பெறவுள்ளது.

மேற்படி மருந்துதோய்க்க விரும்புபவர்கள் நுளம்பு வலைகளை நன்றாகக்கழுவிஎடுத்து வருமாறு நெல்லியடி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் க. இளங்கோ கேட்டுள்ளார். (உ)

## எயிட்ஸ் விழிப்பு கருத்தரங்கு

(ஈச்சமோட்டை)

ரி. ஆர். ஆர். ஓ. மற்றும் யுனிசெவ் ஆகியன இணைந்து நடத்தி வரும் எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு, இன்று மு. ப. 10.00 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மத்தியில் இடம்பெறவுள்ளது. (உ-59)

★ ★ ★

(சண்டிலிப்பாய்)

ஆதிகள் புனர்வாழ்வு நிறுவன ஏற்பாட்டில் இன்று காலை 9.30 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் எயிட்ஸ் விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது. (உ-258)



# தலைவர் வே. பிரபாகரனின் மாவீரர் நாள் உரை

**எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே!**

இன்றைய நாள் ஒரு புனித நாள்.எமது மாவீரர்களின் நினைவு நாள்.எமது இனத்தின இருப்பிற்காக தமது இன்னுயிரை ஈகம் செய்த உன்னதமானவர்களை எமது நெஞ்சத்தின் நினைவாலயத்தில் நாம் நினைவு கூரும் நன்நாள். விடுதலை என்பது வாழ்வின் அதிஉயர்ந்த விழுமியம்.அந்த விழுமியத்தை இலட்சியமாக வரித்து அதற்காக வாழ்ந்து, அதற்காகப் போராடி, அதற்காக மடிந்த எமது மாவீரர்கள் மகத்தான மனிதப் பிறவிகள்.அவர்களது வாழ்வும், வரலாறும் எமது வீரவிடுதலைக் காவியத்தின் உயிர் வரிகள்.

## விடுதலைப் பாதையை செப்பனிடுவது அவசியம்

மாவீர்களே! தமிழர் தேசம் உங்களுக்குத் தலை• வணங்குகிறது. உங்களது தற்கொடையால் தமிழழ மக்கள் இன்று தலை நிமிர்ந்து நிற்கிறார்கள். உங்களது இரத்தத்தாலும், வியர்வையாலும், உங்களது இலட்சிய உறுதியாலும் கட்டியெழுப்பப்பட்ட எமது விடுதலை இயக்கம் இன்று யாராலும் வெற்றி கொள்ள முடியாத, மாபெரும் போராட்ட சக்தியாக உலகப் புகழ் ஈட்டி நிற்கிறது. போர் அரங்கில் நீங்கள் படைத்துச் சென்ற மகத்தான சாதனைகளையே இன்று உலக அரங்கில் நாம் அரசியல் வெற்றிகளாக அறுவடை செய்து வருகிறோம்.

இன்று உலகம் மாறிவருகிறது. உலக ஒழுங்கும் மாறி வருகிறது. உலக நாடுகளின் உறவுகளும் மாறி வருகின்றன. மனித சமுதாயம் முன்னென்றும் காணாத புதிய சவால்களுக்கு முகம் கொடுத்து நிற்கிறது. இன்றைய உலக நிதர்சனத்தை, அதன் யதார்த்தப் புறநிலைகளை நாம் உதாசீனம் செய்ய முடியாது. இன்றைய. காலத்தையும்,இக்காலத்தில் கட்டவிழும் சூழலையும் நாம் ஆழமாகப் புரிந்து, காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப எமது விடுதலைப் பாதையை செப்பனிடுவது அவசியம். இன்றைய காலத்தின் தேவையது.

உலகப் போக்குடன் முரணபடாது, உலக வர்லாற்றின் ஓட்டத்திற்கு இசைவாக நாமும் எமது போராட்ட வரலாற்றை முன் நகர்த்திச் செலவதே விவேகமானது. இன்றைய வரலாற்றின் கட்டாயமும் அதுவே. எமது விடுதலைப் போராட்டம் கால் நூற்றாண்டு கால வரலாறாக நீட்சி பெற்றுச் செல்கிறது. 20 ஆண்டுகளுக்கு முன் இன்றைய நாளில் எமது முதலாவது மாவீரன் களப்பலியாகியதைத் தொடர்ந்து இன்று வரை பல்லாயிரக்கணக்கில் எமது போராளிகள் விடுதலைப் போரில் களமாடி வீழ்ந்திருக்கிறார்கள்.

எமது இனத்தைப் பேரழிவில் இருந்து பாதுகாத்து, எமது தாயக நிலத்தை அந்நியரிடமிருந்து மீட்டெடுக்க எமது விடுதலை இயக்கம் அளப்பரிய அர்ப பணிப்புக்ளைச் செய்துள்ளது. எமது மாவீரர்களின் இம் மகத்தான தியாகங்களால் எத்தனையோ தடவைகள் நாம் பேரழிவுகளின் விளிம்பிலிருந்து மீண்டிருக்கின்றோம். மரணத்தின் வாயிலுக்குச் சென்று மறுபிறவி எடுத்திருககின்றோம். வல்லாதிக்கச் சக்திகளின தலையீடுகளைத் தனித்து நின்று தகர்ததிருக்கின்றோம் எமது விடுதலை இயக்கம் இன்று வானளாவ வளர்ந்து நிற்கிறது. நிமிர்ந்து நிற்கிறது. எமது இயக்க விருட்சத்தின் வேர்களும், விழுதுகளுமாக நிற்பவர்கள் எமது மாவீரர்களே.

## ஆயுத வன்முறையில் ஆசை கொண்டவர்களல்ல

எனது அன்பார்ந்த மக்களே! இன்று எமது விடுதலைப் போராட்டம் ஒரு புதிய வளர்ச்சிப் பாதையில், ஒரு புதிய வராலாற்றுத் திருப்பத்தில் காலடி வைத்திருக்கிறது. என்றுமில்லாதவாறு இன்று ஒரு புதிய சவாலை நாம் சந்தித்து நிற்கின்றோம். போருக்கு ஓய்வு கொடுத்து, சமாதான வழியில், சமரசப் பேச்சுக்கள் வாயிலாக எமது மக்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில நாம் ஈடுபட்டு வருகின்றோம.

நாம் வன்முறையில் பற்றுக் கொண்ட போர் வெறியர் என்றும், சமாதானத்தின் விரோதிகள் என்றும் காலம் காலமாக சிங்களப் பேரினவாதிகள் மேற் கொண்டு வந்த பரப்புரையைப் பொய்யாக்கும் வகையில்,நாம் நேர்மையுடனும், உறுதியுடனும் சமாதான வழிமுறையைத் தழுவி நிற்கிறோம் நாம் ஆயுத வன்முறையில் ஆசை கொண்டு, ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை. இன அழிவை இலக்காகக் கொண்ட, இனவாத ஒடுக்கு முறையின் உச்சத்தில், அநிய இராணுவ அடக்கு முறை சகிக்க முடியாத அளவிற்குத் தீவிரம் அடைந்த கட்டத்திலேயே நாம் ஆயுதம் ஏந்தினோம்.

எமது மக்களின் உயிரைக் காக்கவும், எமது மக்களின் உரிமையை நிலை நாட்டவும் எமது இயக்கம் மேற கொண்ட ஆயுதம் தரித்த விடுதலைப் போரை பயங்கர வாதமாகச் சிங்கள அரசுகள் சித்தரித்தன. தமிழரின் உரிமைப் போரைத் திரிபுபடுத்தி, இழிவு படுத்தி உலக அரங்கிலும் விஷமப் பிரசாரங்கள் முடுக்கி விடப்பட்டன. இப் பொய்யான பரப்புரையை நம்பி பல உலக நாடுகள் எமது அமைப்பிற்குத் தடை விதித்தன. பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டு உலக அரங்கில் இருந்து நாம் ஓரங் கட்டப்பட்டோம். உலக நாடுகள் ஒன்று திரண்டு, எதிரியின் போர்த் திட்டத்திற்கு முண்டு கொடுத்தன. அனைத்து உலகத்தினதும் ஆதரவும், ஆயுத உதவியும் கிட்டியதால் மூர்க்கம் கொண்ட எதிரி போரைத் தீவிரப்படுத்தினான். நாம் தனித்து நின்று போருக்கு முகம் கொடுத்தோம். மக்களின் ஆதரவு மட்டும் எமக்கு மலையாக நின்றது.

## போரில் புலிகளை வெற்றி கொள்ள முடியாது

நாம் அலையலையாக திரண்டெழுந்து ஆக்கிரமிப்புப் படைகளுடன் மோதினோம். போர்க் கலையில் எமது வீர்கள் படைத்த அபாரமான சாதனைகள் உலக இராணுவ நிபுணர்களையே திகைப்பில் ஆழ்த்தின. போரில் புலிகளை வெற்றி கொள்ள முடியாதென்பதனை சிங்கள தேசமும், உலகமும் உணர்ந்து கொண்டன. இந்தச் சூழ்நிலையில் தான் அதாவது எமது போராட்ட வல்லமையை நிரூபித்துக் காட்டி எமக்குச் சாதகமான இராணுவச் சம நிலையில் நின்றபடியே நாம் சமாதானத்தின் கதவுகளைத் திறந்தோம். சமாதானத்தில் எமக்கு உண்மையான பற்றுண்டு என்பதை உலகத்திற்கு உணர்த்திக் காட்டவே நாம் இராணுவ மேலாதிக்க நிலையில் நின்று கொண்டு அமைதி வழியைத் தழுவினோம்.

போருக்கு ஓய்வு கொடுக்கும் விடயத்திலும் நாமே முன்முயற்சிகளை எடுத்தோம். ஒருதலைப் பட்சமான போர் நிறுத்தப் பிரகடனம் செய்து அரசாங்கத்தை அமைதி வழிக்கு அழைத்தோம். சமாதானத்திற்கான மனுவைப் பெற்று ஆட்சிப் பீடம் ஏறிய புதிய அரசு எமது போர் நிறுத்த அறிவிப்பை ஏற்றுக் கொண்டது. இவ்வாண்டு பெப்ரவரி 23ந் திகதியில் இருந்து இருதரப்பும் இணங்கிய போர் நிறுத்தம் சர்வதேச நாடுகளின் கண்காணிபபுடன் செயலுக்கு வந்தது. இப்போர் நிறுத்தம் கடந்த ஒன்பது மாதங்களாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

## நேர்மையுடன் செயற்படத் தயாராகவுள்ளோம்

சிங்கள ஆயுதப் படையினரின் சில பிரிவினரும்,இனவாத சக்திகளும், சமாதான விரோதிகளும் போர் நிறுத்தத்தைக்குழப்பி மோதலை ஏற்படுத்த பல தடவைகள் முயன்றன. எத்தனையோ ஆத்திரமூட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.எமது மக்கள் பலர் அநியாயமாகக் கொல்லப்பட்டனர். ஆயினும் எமது இயக்கம் ஒழுக்கம், கட்டுப்பாட்டை இறுக்கமாகக் கடைபிடித்து அமைதியைக் குலையவிடாது சமாதானத்தைப் பேணி வருகின்றது. சமாதானப்பாதையில்எமக்குள்ள உண்மையான உறுதிப்பாட்டிற்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு. எமது மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண்பது சாத்தியமாயின் அதனை முயன்று பார்ப்பதில் முழு மனதுடனும், நேர்மையுடனும் செயற்பட நாம் தயாராக இருக்கின்றோம்.எமது மக்கள் தம்மது தாயக மண்ணில் தம்மைத்தாமே ஆட்சி புரியும் உரிமை உடையவர்களாக, சுதந்திரத்துடன் கௌரவமாக வாழவேண்டும் என்பதே எமது போராட்ட இலட்சியம். இந்த இலட்சியம் சமாதான வழியில் கைகூடுமானால் அந்த வழியைத் தழுவ நாம் என்றுமே தயாராக இருக்கின்றோம். சமாதான வழிமுறை தழுவி எமது மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க நாம் என்றுமே தயங்கியதில்லை. திம்புவில்,டில்லியில், கொழும்பில், யாழ்ப்பாணத்தில், இப்போது தாய்லாந்திலாக நாம் பல தடவைகள் பல் வேறு வரலாற்றுச் சூழல்களில் பேச்சுவார்த்தையில் பங்கு பற்றி வந்திருக்கின்றோம்.

முன்னைய பேச்சுக்கள் எல்லாமே தோல்வியிலேயே முடிந்தன. முன்னைய சிங்கள அரசுகளின் கடும் போக்கும், நேர்மையற்ற அரசியல் அணுகு முறைகளுமே தோல்விக்குக் காரணம். எனினும் திரு. ரணில் விக்கிரமசிங்காவின் இன்றைய அரசாங்கம் நேர்மையுடனும், துணிவுடனும் தமிழரின் பிரச்சினைகளுக்குத் தர்வு காண முனைகிறது.உறுதியான அடித்தளத்தில் கட்டியெழுப்பப்பட்ட போர் நிறுத்தமும், அதனை மேலும் வலுப்படுத்த சர்வதேச கண்காணிப்புக் குழுவினரின் முயற்சிகளும் சமாதான அணுகுமுறைக்கு உரமேற்றி வருகின்றன.அத்தோடு மிகவும் சாதுரியமாகவும்,சாணக்கியமாகவும் நோர்வே அரசு கடைப்பிடிக்கும் அனுசரணை முறையானது இன்றைய பேச்சுக்கள் முன்னேறிச் செல்வதற்கு பேருதவியாக இருந்து வருகின்றது.

## நம்பிக்கை ஊட்டும் சர்வதேச முயற்சிகள்

எல்லாவற்றிற்கும் மேலாக என்றுமில்லாதவாறு சர்வதேச அரசுகள் சமாதான முயற்சியில் காட்டி வரும் ஆர்வமும், அக்கறையும், ஊக்குவிப்பும் இரு தரப்பினருக்கும் உற்சாகத்தையும், நம்பிக்கையையும் கொடுத்து வருகின்றன. ஒரு வலுவான சமாதானஅடித்தளத்தில் நிலையூன்றி நின்றவாறு படிப்படியாக, கட்டங்கட்டமாக பரஸ்பர நம்பிக்கையை வளர்த்த படி பேச்சுக்களை முன் நகர்த்திச் செல்வதே சாலச்சிறந்தது.

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக முடிவில்லாது தொடர்ந்த கொடிய போரின் விளைவாக எமது மக்கள் பாரிய வாழ் நிலைப் பிரச்சினைகளை எதிர் கொண்டு நிற்கிறார்கள். தமிழர் தேசத்தில் சமூக,பொருளாதாரக் கட்டமைப்புகள சிதைந்து கிடக்கின்றன. தமிழரின் நகரங்களும், பட்டினங்களும், கிராமங்களும் தரை மட்டமாகிக் கிடக்கின்றன.வீடுகள், கோவில்கள், பாடசாலைகள் அழிந்து கிடக்கன்றன. காலம் காலமாக இந்த மண்ணில் நிலைத்து நின்ற பண்டைய நாகரிகம் வேரோடு சாய்க்கப்பட்டிருக்கிறது. இச் சிதைவுகள், அழிவுகள் மத்தியில் இருந்து எமது மக்கள் மீண்டும் தமது சமூக, பொருளாதார வாழ்வை மீளக் கட்டியெழுப்புவது என்பது இலகுவான காரியமல்ல இது ஒரு பிரமாண்டமான, மனிதாபிமானப் பிரச்சினை. இப் பிரச்சினையை சர்வதேச சமூகம் அனுதாபத்துடன் அணுக வேண்டும்.

## 40 ஆயிரம் படையினர் ஆக்கிரமிப்பு

அழிந்து கிடக்கும் தமிழர் தேசத்தின் புனர்வாழ்வுக்கும், புனர்நிர்மாணத்திற்கும் உதவியளிக்க வெளி நாடுகள் பல முன் வந்துள்ளமை எமக்கு நிம்மதியைத் தருகிறது. தமிழர் தாயகத்தில் அமைதி நிலை தோன்றிய போதும் இயல்பு நிலை தோன்றவில்லை. உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் எமது மக்களின் வாழ்விடங்களை சமூக, பொருளாதார, பண்பாட்டு மையங்களை சிங்கள ஆயுதப் படைகள் ஆக்கிரமித்து நிற்கின்றன. சிறிய அளவிலான புவியியற் பரப்பும், குடிசன நெரிசலும் கொண்ட யாழ்ப்பாணக் குடா நாட்டை 40 ஆயிரம் படையினர் ஆக்கிரமித்து நிற்கின்றனர்.

எமது மக்கள் தமது இயல்பு வாழ்வை நடத்த முடியாதவாறு மூசசுத் திணறும் ஆக்கிரமிப்பு. என்றுமே பதட்ட நிலை. தமிழர் பண்பாட்டின் இதய் பூமியான யாழ்ப்பாணம் ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலையாக மாற்றப்பட்டிருக்கின்றது.இங்கு எமது மக்களைச் சிங்கள இராணுவம் தனது பாதுகாப்புக் கேடயங்களாகவே பாவித்து வருகின்றது. வீடுகளும் வீதிகளும்கிராமங்களும் இராணுவ ஆக்கிரமிப்பில் விழுங்கப்பட்டிருப்பதால், இடம் பெயர்ந்த பல்லாயிரம் மக்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்ப முடியாது அவதிப்படுகிறார்கள். இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணாத வரை யாழ்ப்பாணத்தில் சமூக அமைதியும்,இயல்பு நிலையும் தோன்றுவது சாததியமில்லை.

போரை முடிவுக்குக் கொண்டு வ்ந்து, போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் அவசர, அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளை பேச்சுக்களின் ஆரம்ப கட்டத்தில் தீர்த்து வைக்க வேண்டும் என்பதே அன்றும் சரி இன்றும் சரி எமது நிலைப்பாடாக இருந்து வருகிறது.

## சுதந்திரமான பேச்சு கட்டாயமானதாகும்

எமது நிலைப் பாட்டை முன்னைய அரசு நிராகரித்ததன் காரணமாகவே அன்றைய சமாதான முயற்சி தோல்வி கண்டது. ஏதோ நாம் தமிழரின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தொடுவதற்குப் பயந்து, அன்றாடப் பிரச்சினைகளை வலியுறுத்துவதாக முன்னாள் அரசு தவறாகக் கருதியது. ஆயினும் இன்றைய அரசாங்கம் பேச்சுக்களின் ஆரம்பகட்டத்தில், எமது மக்களின் அவசரமான வாழ்க்கைப் பிரச்சினைகளை தீர்ப்பற்கு முன் வந்து நடவடிக்கைகளை எடுத்து வருவது ஆக்க பூர்வமான அறிகுறியாகும். பேச்சுவார்த்தையின் போது எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் வரை சகல விடங்களையும் பேசுவதற்கு நாம் தயார். ஆயினும் பேச்சுக்கள் எவ்வித நிபந்தனைகளும, நிர்ப்பந்தங்களும் இன்றி, வரம்புகள், வரையறைகள் இன்றி,காலக் கட்டாயம் இன்றி சுதந்திரமாக நடைபெறுவதையே நாம் விரும்புகிறோம். ஒரு குறிப்பிட்ட கோட்பாட்டு எல்லைக்குள் பேச்சுக்கள் நிகழ்த்தப் படவேண்டுமென வற்புறுத்துவதோ அன்றி நிர்ப்பந்திப்பதோ எமது மக்களின் அடிப்படை அரசியல் சுதந்திரத்தையும்,தீர்வையும் மீறுவதாக அமையும்.

தமது அரசியல் பகைமையையும், தமது சமூக பொருளாதார பண்பாட்டு வாழ்வையும் நிர்ணயிப்பது எமது மக்களின் அடிப்படையான அரசியல் உரிமையாகும். சுயநிர்ணய உரிமையின் சாராம்சமும் இது தான்.ஐ.நா சாசனத்திலும்,பிரகடனங்களிலும் குறிப்பிடப்படும் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டினை மையப் பொருளாகக் கொண்டே எமது போராட்ட இலட்சியம் நெறிப்படுத்தப் பட்டிருக்கிறது.அன்றும் சரி இன்றும் சரி சுயநிர்ணய உரிமைக்கான எமது போராட்ட இலட்சியத்தில் நாம் உறுதி பூண்டு நிற்கின்றோம்.தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழரின் சுயநிர்ணய உரிமை ஆகியனவையே எமது அரசியல் இலட்சியத்தின் அடிப்படைகள்.திம்புவில் இருந்து தாய்லாந்து வரை இந்த அடிப்படைகளையே நாம் வலியுறுத்தி வருகின்றோம். இம்மூலக் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப் படவேண்டும் என்பதுஎமது நிலைப் பாடு.

தனித்துவமான ஒரு மொழி, பண்பாடு, வரலாறு, நன்கு வ்ரையறுக்கப்பட்ட ஒரு தாயக நிலம்-இன அடையாள உணர்வு போன்ற பண்புகளை உடையவர்கள் என்பதால், எமது மக்கள் ஒரு தேசிய .இனமாக, ஒரு மக்கள் சமூகமாக அமைந்துள்ளனர். ஒரு தனித்துவமான மக்கள் சமூகம் என்ற ரீதியில் எமது மக்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்தானவர்கள்.

சுயநிர்ணய உரிமை என்பது உள்ளான, புறமான இரு அம்சங்களைக் கொண்டது. உள்ளான சுயநிர்ணயம் என்பது ஒரு மக்கள் சமூகத்தின் பிரதேச சுயாட்சி உரிமையை வலியுறுத்துகின்றது. தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில், வரலாற்று ரீதியாக வாழ்ந்து வந்த பாரம்பரிய மண்ணில் அந்நிய சக்திகளின் ஆதிக்கம், தலையீடு இன்றி சுதந்திரமாக,கௌரவமாக வாழ விரும்புகின்றார்கள். தமது மொழியை வளர்த்து, தமது பண்பாட்டைப் பேணி, தமது பொருளாதாரத்தை மேம்படுத்தி, தமது இன அடையாளத்தைப் பாதுகாத்து வாழ விரும்புகிறார்கள். தமது தாயக மண்ணில், தம்மைத் தாமே ஆளும் சுயாட்சி உரிமையோடு வாழ விரும்புகின்றார்கள். இதுவே எமது மக்களின் அரசியல் அபிலாஷை. உள்ளான சுயநிர்ணயத்தின் அர்த்த பரிமாணம் இதில் தான் அடங்கியிருக்கிறது.

## எம்மை நாமே ஆளும் அதிகாரம் வேண்டும்

உள்ளான சுயநிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையில், எமது தாயக நிலத்தில் எமது மக்கள் தம்மைத் தாமே ஆளக்கூடிய பூரண சுயாட்சி அதிகாரத்துடன் ஒரு தீர்வு முன்வைக்கப்பட்டால் நாம் அத்திட்டத்தை சாதகமாகப் பரிசீலனை செய்வோம்.

ஆனால் அதேவேளை எமது மக்களுக்கு உரித்தான உள்ளான சுயநிர்ணயம் மறுக்கப்பட்டு, பிரதேச சுயாட்சி உரிமை நிராகரிக்கப்பட்டால் நாம்பிரிந்து சென்று தனி அரசு அமைப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. இனவாதமும், இனவாத ஒடுக்குமுறையுமே பிரிவினைவாத அரசியலுக்கும், கிளர்ச்சிகளுக்கும் மூலகாரணமாக அமைகின்றன. நிலையான சமாதானத்தையும், இன ஒருமைப்பாட்டையும், பொருளாதார மேம்பாட்டையும் சிங்கள மக்கள் விரும்புவார்களான [illegible] இனவாத சக்திகளை இனங்கண்டு ஒடுக்க வேண்டும்.

தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு[illegible] முழு மனதுடன் ஒத்துழைக்க வேண்டும். தமிழ் மக்கள் தமது தாயகத்தில் சுயாட்சி அதிகாரமுடைய ஆட்சியை நிறுவி தம்மைத்தாமே [illegible]ளுவதற்கு சிங்கள மக்கள் தடையாக இருக்கக் கூடாது. தமிழர்களுட[illegible]ன் சமாதான சகவாழ்வை நடத்துவதா? அன்றி தமிழர்களைப் பிரிந்துசெ[illegible]ல்ல நிர்ப்பந்திப்பதா? என்பது சிங்[illegible] தேசத்தின் அரசியல் போக்கில்தான தங்கியிருக்கிறது. நம்பிக்கையூட்டும் நல்லெண்ணச் சூழ்நிலையில் அரசு புலிகள் மத்தியிலான பேச்சுக்கள் முன்னேற்றமடைந்து செல்வது எமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

இந்தச் சமரசப் பேச்சுக்களில் உலக நாடுகள் காட்டும் ஆர்வமும், யுத்தத்தால் சிதைந்து கிடக்கும் தமிழர் தேசத்தை மீளக் கட்டியெழுப்பி, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு புனர்வாழ்வளிக்க முன்வந்திருப்பதும் எமக்கு உற்சாகத்தைத் தருகிறது.

## சமாதானம் குழம்பினால் தனியரசு அமைவது உறுதி

நோர்வே அரசின் அனுசரணையுடன் நடைபெறும் சமாதான முயற்சி வெற்றிபெற வேண்டும் என்பதும், இத்தீவில் வதியும் சகல சமூகத்தினரும் ஒத்திசைவாக ஒன்றுகூடி வாழவேண்டும் என்பதுமே எமது ஆழமான அவா.பெரும் நம்பிக்கையுடனும், எதிர்பார்ப்புடனும், உலகத்தின் நல்லாசியுடனும் நிகழ்ந்து வரும் சமாதானப் பேச்சுக்களை தமது சுயநல அரசியல் நோக்கங்களுக்காக சிங்களப் பேரினவாத சக்திகள் குழப்பி விட்டால் அது தமிழ் மக்களை தனியரசுப் பாதையில் இட்டுச் செல்லும் என்பது திண்ணம்.

அமைதி வழியில், மெனமுறை தழுவி நேர்மையுடனும், நெஞ்சுறுதியுடனும் நாம் எமது போராட்ட இலட்சியத்தை அடைய முயன்று வருகின்றோம். காலத்திற்குஏற்ப,வரலாற்றுக் கட்டாயத்திற்கு அமைய எமது போராட்ட வழிமுறைகள் மாறலாம். ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப் போவதில்லை. சத்தியத்தின் சாட்சியாக நின்று எமது மாவீரர்களின் தியாக வரலாறு எமக்கு வழிகாட்டும். அந்த சத்தியத்தின் வழியில் சென்று நாம் எமது இலட்சியத்தை அடைவோம் என்பது உறுதி.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

### நைஜீரிய அழகுராணிப் போட்டி

# கலவரத்துக்கு காரணமான

# ஆசிரியருக்கு மரணதண்டனை

## இஸ்லாத்துக்கு மாறான கட்டுரை பிரசுரித்தாராம்

(அபுஜா)

**நைஜீரியாவில் நடைபெறவிருந்த உலக அழகிப் போட்டிக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்திய பத்திரிகையாசிரியருக்கு நைஜீரியாவின் வடக்கு மாநில நீதிமன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.**

'உலக அழகிப் போட்டியை நபிகள் நாயகம் அங்கீகரித்திருப்பார்' என்று நைஜீரியப் பத்திரிகையொன்றில் கட்டுரை பிரசுரமாகியதை யடுத்து, ஏற்பட்ட கலவரங்களில் 215 பேருக்கு மேல் உயிரிழந்தனர்.

இக் கலவரங்களையடுத்து உலக அழகிப் போட்டி இங்கிருந்து லண்டனுக்கு மாற்றப்பட்டது.

'இஸ்லாம் மதத்தையோ, முகமது நபிகளையோ அவமதிப்பவர்கள் கொல்லப்பட வேண்டும்' என்று அல்குர்ஆனில்' தீர்க்கமாக குறிப்பிடப்பட்டுள்ளதாக ஸம்பாரா மாநிலத் தகவல் ஆணையாளர் கூறியுள்ளார் என்று தகவல்கள் கூறின.

மேற்படி கட்டுரையை பிரசுரித்தவர் என்று கூறப்படும் ஆசிரியருக்கே மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (பி-4)

## அமெ. - பிரிட்டன் விமானங்கள் மீது ஈராக் ஏவுகணைத் தாக்குதல்

(பக்தாத்)

ஈராக்கின் தெற்கு, வடக்குப் பகுதிகளில் உள்ள சூனிய பிரதேசங்களில் ரோந்து சென்ற அமெரிக்க பிரிட்டிஷ் விமானங்கள் மீது ஈராக்கிய படையினர் நேற்று முன்தினம் விமான எதிர்ப்பு குண்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதை ஈராக்கிய இராணுவப் பேச்சாளர் ஒருவர் அதிகார பூர்வமாக அறிவித்துள்ளார்.

ஈராக்கின் 4 வருடகால இடைவேளைக்குப் பின்னர், ஐக்கிய நாடுகளின் ஆயுதப் பரிசோதகர்கள் சோதனைகளை ஆரம்பித்து வரும் நிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் ஈராக்கின் வான் சூனியப் பிரதேசத்தில் அமெரிக்க விமானங்கள் மீது ஈராக் சுட்டது ஐக்கிய நாடுகளின் இம்மாதத் தீர்மானத்தை மீறும் செயல் என அமெரிக்கா கூறுகின்றது.

இத் தீர்மானத்தின் படி ஈராக் ஆயுத சோதனைக்கு முழுமையான ஆதரவை வழங்கவேண்டும் என அமெரிக்கா கூறுகின்றது.

இதேவேளை கடந்தவாரம் அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் ஈராக்கின் மேற்குப் பகுதி இராணுவத்தளங்கள் மீது தாக்குதல் நடத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது. (பி-4)

## பிரியங்கா காந்தி அரசியலுக்கு தற்போதுவரும் நோக்கமில்லை

(புதுடில்லி)

அரசியலில் தற்போதைக்கு ஈடுபடப் போவதில்லை என்று காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியாகாந்தியின் மகள் பிரியங்கா உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

லக்னோவில் நேற்று நிருபர்களிடம் பேசிய பிரியங்கா, இரண்டு குழந்தைகளை வைத்துக் கொண்டு அரசியலில் ஈடுபடுவதென்பது எனக்கு மிகவும் சிரமமாக இருக்கும் என கருதுவதாக தெரிவித்தார்.

நான் அரசியலில் தற்போது ஈடுபடவில்லையென்றாலும் எந்த நேரமும் அமைதிதொகுதியைச் சேர்ந்த மக்களுக்கு ஆதரவாகவே இருப்பேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (பி-2)

## தாய்லாந்தில் உலகசாதனை ஏற்படுத்திய உடற்பயிற்சி வகுப்பு

(பாங்கொங்)

தாய்லாந் தலைநகர் பாங்கொங்கில் பிரதமர் தக்ஷின் ஷினாவாத்ரா தலைமையில் நடைபெற்ற ஒரு மணிநேர ஏரோபிக்ஸ் உடற் பயிற்சி வகுப்பில் 47,000பேர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வு ஒரு உலகசாதனைநிகழ்ச்சி எனக்கருதப் படுகின்றது.

60,000 பேர் கலந்துகொள்வார்கள் என்றுஎதிர்பார்க்கப்பட்ட போதும், கடும் மழை காரணமாகவே 47,000 பேர் மட்டுமே கலந்து கொண்டனர் என்று உடற்பயிற்சிவகுப்பின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆரோக்கிய வாழ்வின் விழிப்புணர்வுதின விழாவின் ஒரு நிகழ்வாக தாய்லாந்தின் அரச குடும்பத்தின் ஏற்பாட்டில்இந்த உடற்பயிற்சிவகுப்பு நடைபெற்றது. (பி-02)

## தனிநாடு கோரும்புரட்சி இயக்கம்மீதான தடைநீக்கம்

(புதுடில்லி)

இந்தியாவின் நாகாலாந்து மாநிலத்தில் தனிநாடுகோரி போராடிவரும் நாகாலாந்து தேசிய சோஷலிச பேரவை என்ற இயக்கம்மீதான தடையை இந்தியஅரசு நீக்கியுள்ளது.

இவ் வியக்கத்தின் மீது கடந்த 12 வருடங்களாக இந்தியா விதித்துவந்த தடையினை நேற்றுமுன்தினம் தளர்த்தியது.

கடந்த 2 வருடங்களுக்கு மேலாக அவ்வியக்கத்தலைவர்களுடன் இந்தியரசுத்தூதுவரான கே. பத்மநாதையா ஐரோப்பாவிலும், தென்கிழக்காசியாவிலும் பேச்சுவார்த்தைகளை நடத்திவந்தார்.

1990 இல் இந்தியாவில் தடைசெய்யப்பட்ட இந்த இயக்கம் 1997 இல் அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க யுத்தநிறுத்தம் மேற்கொண்டது.

இவ் யுத்தநிறுத்தம் தொடர்ந்து நீடிக்கப்பட்டு வந்தமையால் இதன்மீதான தடையை இந்தியா நீக்கியமை குறிப்பிடத்தக்கது. (பி-4)

## கார்பைற் ஆலைக்குள் புகுந்து ஆர்ப்பாட்டம் 70 பேர் கைதாகி விடுதலை

(புதுடில்லி)

இந்திய மத்தியப் பிரதேசத்தின் தலைநகர் போபாலிலுள்ள யூனியன் கார்பைற் ஆலைக்குள் புகுந்து ஆர்ப்பாட்டம் நடத்திய பன்னாட்டுச் சுற்றுச்சூழல் அமைப்பான கிறீன்ரீஸ் அமைப்பைச் சேர்ந்த 70 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போபால் யூனியன் கார்பைற் ஆலைக்குள் இருக்கும் விஷவாயுக் கழிவுகளை உடன் அகற்ற வேண்டும் என்று, பலவந்தமாக ஆலைக்குள் புகுந்து ஆர்ப்பாட்டம் நடத்தியதையடுத்தே இவர்கள் 70 பேரும் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

1984 ம் ஆண்டு டிசம்பர் 2 ஆம் திகதி நள்ளிரவு யூனியன் கார்பைற் ஆலைக்குள் ஏற்பட்ட விஷவாயுக்கசிவினால் 1000 க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதுடன், பல்லாயிரக்கணக்கானோர் பெரும் பாதிப்படைந்தனர். இந்தப் பாதிப்பு இப்போதும் தொடர்ந்து கொண்டேயுள்ளது என்றும், இதன் காரணமாகவே தற்போதும் ஆலைக்குள் இருந்து வரும் கழிவுகளை அகற்ற வேண்டுமென பலவந்தமான கோரிக்கை ஒன்றை வைத்து ஆர்ப்பாட்டம் ஒன்றை அவர்கள் நடத்தியுள்ளனர் என்று கூறப்படுகிறது.

இதேவேளை பிந்திக் கிடைத்த ஒரு தகவலின் படி கைது செய்யப்பட்ட கிறீன்ரீஸ் அமைப்பைச் சேர்ந்த 70 பேரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்று தெரியவருகின்றது. (பி-02)

## மாலைதீவு பறவைகள் பண்ணைக்குப் படையெடுப்பு

மாலைதீவில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தினால் அந்நாட்டின் கொக்குபோன்ற தோற்றமுடையபறவையினம் ஒன்று பண்ணைக்கடற்கரைப் பகுதிக்கு பெருமளவில் படையெடுக்க ஆரம்பித்துள்ளது.

கடந்த ஒருசிலதினங்களாக இவற்றின் வரவு அதிகரித்துக் காணப்படுகின்றன. (உ-201)

## அங்கோலாவில் கிளர்ச்சியாளர் மீதான ஐ. நா. தடைகள் நீக்கம்

(லுவாண்டா)

அங்கோலாவின் யுனிற்றாக் கிளர்ச்சி அமைப்பு மீதான ஐக்கிய நாடுகள் சபையின் தடைகள் தளர்த்தப்படுவதற்கு அமெரிக்கா ஆதரவு வழங்கியுள்ளது.

யுனிற்றாஅமைப்பு மீதான அனைத்துத் தடைகளையும் விரைவில தளர்த்துவதற்கான சிபாரிசுக்குஆதரவு வழங்குவதாக அமெரிக்க ராஜாங்க திணைக்களத்தின் பேச்சாளர் கூறியுள்ளார்.

யுனிற்றாமீதான தடைகள் நீக்கப்படுவதால் அது ஆயுத இயக்கத்திலிருந்து முக்கிய அரசியல் எதிர்க்கட்சியாக மாற முடியும் என்றுஅவர் மேலும் கூறினார்.

அங்கோலாவின் சமாதான முயற்சிகள்பற்றி அந் நாட்டிற்கான ஐக்கியநாடுகள் சபையின் விசேடதூதுவர் எதிர்வரும் 06 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் விளக்கமளிக்கவுள்ளார்.

இதனையடுத்து யுனிற்றா மீதான ஐக்கியநாடுகளின் தடையினைதளர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்படுகின்றது.

கடந்த பெப்ரவரி யுனிற்றா அமைப்பின் மூத்ததளபதி ஜெனா சவிந்தி கொல்லப்பட்டதையடுத்து அவ் அமைப்புபலம்இழந்தது. இன்நிலையில் அரசியல்கட்சியாக மாறுவதற்கு முனைந்துவருகின்றது.

யுனிற்றா அமைப்பின் மீது 1993 ஆம் ஆண்டு ஆயுதஎண்ணெய்த் தடைகளை ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவை விதித்தது.

1998 இல்யுனிற்றாத் தலைவர்கள் மீதான பயணபொருளாதார வர்த்தகத் தடைகளும் விதிக்கப்பட்டன. (பி-4)

## சமாதான உடன்பாடு அடுத்த மாதம் கைச்சாத்து

(ஜகார்த்தா)

இந்தோனேஷிய அஜி மாகாணத்தில் போராட்டம் நடத்தும் பிரிவினை வாதத் தீவிரவாதிகளும், அந் நாட்டு அரசும் அடுத்த மாதம் சமாதான உடன்படிக்கையொன்றைக் கைச்சாத்திடவுள்ளனர்.

இச்சமாதானஉடன்படிக்கையின் பின்சர்வதேசஉதவிவழங்கும் நாடுகள் அஜி மாகாணத்திற்கு நிவாரண உதவிகளை வழங்க முன்வரவேண்டும் என்று சமாதானத்தின் இந்தோனேஷிய நடுநிலையாளர் பறியோஸஸ்ரோஹன்ரியோ கூறியுள்ளார்.

## உலக தரிசனம்

அஜிமாகாணத்தின் புனரமைப்புக்களை ஆராய அமெரிக்கா, ஜப்பான், மற்றும்உலக வங்கி ஆகியன ஜப்பானின் அனுசரணையில் அடுத்த வாரம் டோக்கியோவில் கலந்துரையாடவுள்ளன.

இந்தோனேஷியாவிற்கு உதவி வழங்கும் நாடுகளில் முன்னணி வகிக்கும் ஜப்பான் அஜிமாகாணப் புனரமைப்புக்கு உதவிவழங்கத் தயாராகவுள்ளது.

அஜி சுதந்திர அமைப்புத் தீவிரவாதிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையில் 2 வருடங்களுக்கு மேலாக சுவிற் சர்லாந்தில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுவருகின்றன.

இந்தப் பேச்சுவார்த்தைகளின் பயனாக எதிர்வரும் 9 ஆம் திகதி இரு தரப்பினருக்குமிடையில் சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்படலாம் என்று சர்வதேச மத்தியஸ்தர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (பி-4)

## திருவிழா

(மந்திகை)

தும்பளை மரியன்னை ஆலயத்திருவிழா நாளை நவநாட்களுடன் ஆரம்பமாகி தொடர்ந்து10தினங்கள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு எதிர்வரும் 8 ஆம் திகதி திருநாள் திருப்பலியுடன் முடிவடையவுள்ளது. (உ-23)

## பேய்...

பிறகு அந்தவீட்டில் பேய்வரவுமில்லை. காதல்கடிதங்களை எழுதவுமில்லை.

நான் மைநோனாவைக் குணப்படுத்திய பின், மிஸிநோனாவுக்கு ஏன் அப்படியொருநிலை ஏற்பட்டதென்ற கேள்விக்கும் பதிலளிக்க விரும்புகிறேன். நான்பேயை விரட்டித்தான் அந்தவீட்டில் அமைதியை ஏற்படுத்தினேன் என்று மிஸிநோனா நினைத்துவிட்டார். காரணம் மைநோனாவைப் பற்றிய உண்மையைக்கூறாமல் கொழும்பு திரும்பியதுதான். என்னால் விரட்டப்பட்டபேய் எங்கோ புகுந்துவிட்டதென்று கற்பனைசெய்த அவர், அதுதன் உடலில் புகுந்துவிட்டதோ என்றும்சந்தேகம் கொண்டார். இந்தச் சந்தேகம் அவரைநம்பவைத்தது. முடிவு தாமும் பேய்பிடித்தவர்என்ற நினைப்பு அவருக்கு மனநோயை ஏற்படுத்திவிட்டது. நான் மைநோனாவின் இரகசியத்தை தெரிவித்தும், உண்மைவிளங்கியதுடன், தன்னம்பிக்கை ஏற்பட்டுமிஸிநோனா தானாகவே குணமாகிவிட்டார். மொத்தத்தில்பேய் பற்றிய நினைப்பெல்லாம் வெறும் பிரமையே.

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாதுநிற்பதொன்று இல்

குறள்

# வலம்புரி

## மாவீரர் துயிலெழுந்தார்

நேற்று நவம்பர் 27 மாவீரர் நாள் எங்கும் உணர்வுபூர்வமான நிகழ்வுகள். மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு மக்கள் சாரி சாரியாகச் சென்ற காட்சி. இவையெல்லாவற்றையும் சிங்களப் படைகள் அமைதியாக ஆரவாரமின்றி பார்த்தனர்.

விடுதலைப்புலிகள் ஓர் பயங்கரவாத அமைப்பு என சிங்கள அரசுகள் கூறிய பிரசாரத்திற்கு நேற்றைய நிகழ்வு சாவு மணி அடித்துவிட்டதென்பதை சிங்களப்படைகள் நிச்சயம் உணர்ந்திருக்கும்.

சிறுவர்கள்முதல் முதியவர்கள்வரை மாவீரர் துயிலும் இல்லங்களை நோக்கிச்சென்ற காட்சி பார்ப்போரை பரவசப்படுத்த வல்லது. இதற்கு மேலாக, மாவீரர்இல்லத்தில் இடம்பெற்ற ஈகச் சுடர்ஏற்றல், அகவணக்கம், மாவீரர்கீதம், இவற்றுக்கிடையே மெதுவாக எழுகின்ற இதயத்தின் அழுகை அவற்றின்தாக்கம் இவற்றையெல்லாம் வெறும் மனிதமொழிகளில் வடித்துவிடமுடியாது.

அதனை நேரில்அனுபவிக்கின்றபோதே அந்த ஆத்மார்த்தமான உணர்வைப் பகிர்ந்துகொள்ள முடியும்.

மண் மீட்பிற்காய் மரணித்த மாவீரர்கள் துயில்கின்ற இல்லத்தில் நேற்றைய நிகழ்வு நிச்சயம் அவர்களின் உறக்கத்தைக் கலைத்திருக்குமென்பதுஉறுதி.

உறவுகளின் கண்ணீர்த் துளிகள் ஓ. . . ,அந்த உணர்வுகளின் விம்மல்கள் மண்மீதுகொண்ட பாசத்தால் மௌனமாகத் தூங்குகின்ற மண்ணின் மைந்தர்களை நிச்சயமாகத் துயிலெழுப்பியிருக்கும்.

ஆம். சின்னஞ்சிறுசுகளின் கண்ணீரும், கரங்கள் தூவிய புஸ்பங்களும், தாய்மையின் சோகமும், இரத்தஉறவுகளின் உணர்வுகளும் நிச்சயம் மாவீரரைத் துயிலெழுப்பும்.

பிறர் வாழ்வதற்காகத் தம்முயிரைத் தியாகம்செய்த மாவீரர்கள் மௌனமாகத் துயில்கின்றவேங்கைகள். தம் தேசத்தை பார்ப்பதற்காக, துயிலெழுகின்ற நாள் நவம்பர் 27என்றால் அது சாலவும் பொருத்துடையது.

# பேய் பெண்ணுக்குக் காதல் கடிதம் எழுதியது

# தாய் மனம்தளர்ந்து சுயநினைவு இழந்தாள்

அப்புஹாமியின் மகள் மைநோனா மீது பேய் எல்லையில்லா அன்பு செலுத்தியது. அவள் சுகவீனமுற்ற போது மருந்து வகைகளைக் கூட மர்மமாகக் கொண்டு வந்து கொடுத்தது.

**டாக்டர் ஏபிரஹாம் கோவூர்**

**1962** ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதிய சிங்களப்பத்திரிகை ஒன்றில் 'பேயின் காதல்' என்ற தலைப்பில் செய்தி ஒன்றைப் படித்தேன், புளத்சிங்களத் தொகுதியிலுள்ள ரட்டியாகல என்ற கிராமத்திலுள்ள பாழடைந்த வீடொன்றில் இந்த அற்புதம் நிகழுவதாகவும், இதை ஆராயச் சென்ற பத்திரிகையாளர் ஒருவர் மர்மமான முறையில் தேங்காய்ச் சிரட்டையால் அடிக்கப்பட்டதாகவும், கசங்கிய காதல் கடிதம் ஒன்று அவரெதிரில் மாயமாக வந்து வீழ்ந்ததாகவும் கூறப்பட்டிருந்தது. மேலும் இந்தப் பேய் ஒரு இள மங்கைக்குத் தொடர்ந்து காதற் கடிதங்களை எழுதி வந்ததாகவும், பல அட்டகாசங்களைச் செய்ததாகவும் கூறப்பட்டிருந்தது.

### பணம் போனது பேய் வந்தது

பலமாந்திரீகர்கள் நான்கு மாதங்களாகப் பேயை விரட்ட எவ்வளவோ முயற்சிகள் மேற்கொண்டும் பலன் கிடைக்கவில்லை, இதனால் இந்த வீட்டில் வசித்தவர்கள் அமைதியின்றி வாழ்ந்தனர். அறுபத்திரண்டு வயது நிறைந்த விவசாயியான தெல்கஹகே பொடி அப்புஹாமி என்பவரும், அவரின் மனைவி மிஸிநோனாவும் தங்களின் மூன்று மைந்தர்களுடனும் இரு புத்திரிகளுடனும் இங்கு வசித்து வந்தனர். அந்த ஆண்டு ஜனவரிமாதம் முதல் முதலாக அவர்கள் வீட்டிலிருந்து, பணம் காணாமல் போனதிலிருந்தே பேயின் விளையாட்டு ஆரம்பித்தது.

இதிலிருந்து சம்பவங்கள் அதிகரித்தன, வீட்டில் கற்கள் வீசப்பட்டன, நாற்காலிகளும் வீசிக்கிடந்தன, பானைகளும், சட்டிகளும் திடீர் திடீரென்று உடைத்து நொறுக்கப்பட்டன; சுவர்களில் தானாகவே சித்திரங்கள் வரையப்பட்டன. ஒருமுறை அரிசிக் கூப்பன்கள் அனைத்தும் கிழித்தெறியப்பட்டன. இலங்கை முழுவதும் கருவாட்டுக்குத் தட்டுப்பாடு நிலவிய காலத்தில் கூட அந்தப் பேய், அப்புஹாமியின் வீட்டில் பெருமளவு கருவாட்டைக் கொண்டுவந்து போட்டிருந்தது. ஆனால், பயத்தால் இதை எவரும் தொடவே இல்லை. உணவு சமைக்கப்பட்டதும் பேய் மாயமாக உணவை உட்கொண்டுவிடும். கோப்பையில் பரிமாறப்பட்ட சோற்றைப் பேய் மாயமாக உட்கொள்ளுவதைத் தான் பலமுறை பார்த்ததாக மிஸிநோனா தெரிவித்தார்.

### காதல் கடிதங்கள்

வீட்டிற்கு எவராவது விருந்தினர் வந்திருந்தால மர்மமாகக் குளிர்பான போத்தல்கள் விருந்தினர் காலடியில் உருண்டுவந்து நிற்கும். சிகரெட்டுகளும் அவர்கள் முன் திடீரென்று வந்து விழும். இவையெல்லாவற்றையும் விட அப்புஹாமியின் மூத்த மகள் மைநோனா மீது பேய் எல்லையில்லா அன்பு செலுத்தியது ஒருமுறை மைநோனா காய்ச்சல கண்டு படுக்கையில் இருந்தபோது, பெருந்தொகையான ஆயுர்வேத மருந்து வகைகள் அவள் கட்டிலினருகில் கொண்டுவந்து குவிக்கப்பட்டிருந்தன. ஆனால் மைநோனா பயத்தால் இவற்றைத் தொடவேயில்லை. சில சமயங்களில் காதல் கடிதங்களை எழுதி, பேய் அவற்றை மைநோனாவிடம் வீசியெறியும்.

கொப்பி புத்தகமொன்றிலிருந்து கிழித்தெடுக்கப்பட்ட தாள்களிலே இக் கடிதங்கள் சிங்களத்தில் எழுதப்பட்டிருக்கும். இக் கடிதங்களில் சிறு சித்திரங்கள் கூடக் கீறப்பட்டிருந்தன. இப்படியான கடிதங்களில் ஒன்றுதான் பத்திரிகையாளர் மீது வீசி எறியப்பட்டது. முகப்பவுடர் டின் ஒன்றும், சீனி நிறைந்த போத்தல் ஆகியனவும் இந்தப் பத்திரிகையாளர் மீது மர்மமாக வீசப்பட்டன. அவரின் காமிரா, பையிலிருந்த 'பிளாஷ் பல்புகள்' சிலவற்றைக் கூட இப்பேய் திருடியது. அந்த வீட்டிலிருந்த நாற்காலிகள் காணாமல் போயின. வேறு வீடுகளிலிருந்த நாற்காலிகள் இங்கு வந்து கிடக்கக் காணப்பட்டன.

### மாந்திரீகர் முயற்சி பயன் தரவில்லை

நள்ளிரவில் திடீரெனக் கதவுகள் தட்டப்படும். வீட்டில் நித்திரையாக இருப்பவர்களின் கழுத்தில் கத்தி, வாள் போன்றவைகள் வைக்கப்பட்டுப் பயமுறுத்தப்படும். சில மாந்திரீகர்கள் இப்படி அட்டகாசம் புரிந்த பேயை விரட்ட எடுத்த நடவடிக்கைகள் மூன்று தினங்கள் மட்டுமே பலனளித்தன. இப்படி அந்தப் பத்திரிகையில் வெளியாகியிருந்த அப்புஹாமி வீட்டுப் பேய் பற்றிய செய்தியை அறிந்த நான் சம்பந்தப்பட்ட நிருபருடன் தொடர்புகொண்டேன், இதையடுத்து இந்தப் பேயைப் பற்றிய மர்மத்தைக் கண்டுபிடித்து விடவேண்டுமென்றதிட்டத்துடன், ஜூன் மாதம் 5ஆம் திகதி ரட்டியாகல கிராமத்திற்குப் புறப்பட்டேன். என்னுடன் என் மனைவியும் வந்தார்,

கொழும்பிலிருந்து 33மைல் தூரத்திலிருந்த அந்தக் கிராமத்தை அடைந்து, அங்கு மூன்று மணி நேரம் விசாரணைகளை நடத்தி ஆராய்ச்சி செய்தேன். ரட்டியாகல கிராமத்தைநான்அடைந்தபோது, மாலை மணி மூன்றிருக்கும். வழமைபோல் பேய் அட்டகாசம் புரிந்த வீட்டை வேடிக்கை பார்க்கச் சுமார் முந்நூறு பேர் வரையில அப்புஹாமியின் வீட்டில் திரண்டிருந்தனர். ஆனாலும் இக் கூட்டம் எனது ஆராய்ச்சிக்கு இடையூறு விளைவிக்கவேயில்லை.

### தனித்தனியே விசாரணை

தென்னை மரமொன்றின் நிழலில் அமர்ந்த நான், அந்த வீட்டு அங்கத்தவர்களைத் தனித்தனியே அழைத்து விசாரணைகளை நடத்தினேன். எவராக இருந்தாலும் கண்ணால் கண்டவற்றை மட்டுமே கூறவேண்டுமென்று தெரிவித்தேன். அவர்கள் குடும்பச் சம்பவங்கள், பிரச்சினைகள், குடும்ப விரோதிகள் போன்ற பல விபரங்களை தெரிவித்தனர். ஆனால், எவருமே மேற்கூறிய எந்தவொரு மர்மத்தையும் கண்ணால் கண்டதாகத் தெரிவிக்கவேயில்லை. சில மர்மங்கள் சிறிது காலத்திற்கு முன்னால் நடந்ததாகவும் சொன்னார்கள்.

அடுத்து, காதல் கடிதத்தை எழுதியவரைக் கண்டுபிடிக்கும் நோக்கத்துடன், அனைவரையும் கடிதம் ஒன்றை எழுதச் செய்தேன். இதிலிருந்து இந்த வீட்டில் நடந்த சில மர்மச் செயல்களுக்குக் காரணமானவர் யார் என்பது விளங்கியது. அந்த நபரைத் தனியாக அழைத்து இனிமேல் இப்படிச் செய்யக்கூடாதென்று எச்சரித்தேன், எவருக்கும் அவர் பற்றிக் கூறமாட்டேன் என்றுநான் உறுதியளித்ததை அடுத்தே அந்த நபர் உண்மைகளை ஒப்புக்கொண்டார். அவருக்கு மேலும் பல அறிவுரைகளையும் வழங்கினேன். கடைசியாக, அந்த வீட்டில் வசித்த அனைவரையும் ஓர் இடத்திற்கு அழைத்து, சிறு பிரசங்கமே செய்தேன்.

மாந்திரீகர்களுக்கு 1500 ரூபாவை வீணாக விரயமாக்கியது பற்றியும் சொல்லி, இது சுத்த மூட நம்பிக்கை மிகுந்த செயல் என்று சுட்டிக் காட்டினேன். இன்றிலிருந்து இந்த வீட்டில் பேயின அட்டகாசங்கள் நடப்பதோ, காதல் கடிதங்கள் வருவதோ இருக்காதென்று அவர்களுக்கு உறுதியளித்து விட்டுக் கொழும்பு திரும்பினேன். நான்கு தினங்கள் கடந்தன. ஒரு காரில் அப்புஹாமி, அவர் மகன் டோலிஸ் சிங்கோ உட்படப் பலர் என் வீட்டுக்குவந்தனர்.

### தாயாரைப் பேய் பிடித்தது

மகன் டோலிஸ்சிங்கோவும், மகள் மைநோனாவும் தங்கள் தாயார் மிஸிநோனாவை அணைத்தபடி கூட்டி வந்து அமர்த்தினார். மிஸிநோனாவின் தலை அங்குமிங்கும் அசைந்தபடிஇருந்தது. "ஐயா எங்கள் வீட்டில பேய் அட்டகாசம நின்று விட்டது, ஆனால், அந்தப் பேய் இப்பொழுது எங்கள் தயாரைப் பிடித்துக் கொண்டு விட்டது. "என்று டோலிஸ் சிங்கோ கவலையோடு சொன்னார். மிஸிநோனாவை உற்று நோக்கிய நான் சிறிது நேரம் யோசித்தேன்.

ஒரு முடிவுக்கு வந்தவனாக மகள் மைநோனாவைத் தனியே அழைத்து, "இனிமேல உண்மையைமறைத்தால் உன்தாய் பைத்தியமாக மாறிவிடுவாள். அதனால உங்கள வீட்டில் நடந்த பேய் கோளாறுகளுக்கு நீதான் காரணம், நடந்த சம்பவங்களைச் செய்ததுநீதான்என்றஉண்மைகளைக் கூறப் போகிறேன்" என்றேன். மைநோனா முதலில் அதற்குச் சம்மதிக்கவில்லை. ஆனால், தனதுதாய் மீதிருந்த பாசம் அவரது மனதை மாற்ற உதவியது. அந்தவீட்டில்நடந்தஅத்தனை மாமச்சம்பவங்களையும் செய்தது தானே என்பதைத் தனது தாய்க்குத் தெரிவிக்கும்படி கூறியபோது அதற்குச்சம்மதம தெரிவித்தார். சிறிது நேரத்தில மிஸிநோனா சுயநினைவுக்கு வந்தும் மகள் மைநோனா பற்றிய உண்மைகளைச் சொன்னேன்.

### திருமணம் அவசியம்

வயதிற்குமீறியஉடல்வளர்ச்சியும, பாலுணர்வு, சம்பந்தமான ஆசாபாசங்களுமே மைநோனாவுக்கு 'ஸிச்சோபிரனிக்' (Seizophmenic) என்ற மனநோயை ஏற்படுத்திவிட்டதென்பதைத் தெளிவாக விளக்கினேன். கூடியவிரைவில் மைநோனாவுக்குத் திருமணம் செய்யும்படியும் ஆலோசனை வழங்கி அவரைக் கவனித்துக்கொள்ள வேண்டிய வேறுசிலவழிவகைகளையும் தெரிவித்தேன், இதன்பின் மிஸிநோனா தெளிவு பெற்றார். அனைவரும் மனநிம்மதியுடன்தங்கள் ஊருக்குப்புறப்பட்டுச் சென்றனர். அதன்

(8-ம் பக்கம் பார்க்க)

## சாயி அருளமுதம்



தகவல் தொடர்புகளும், போக்குவரத்தும் துரிதமாகியதன் காரணமாக உலகம்மிகவும் சிறியதோர் கோளமாகிவிட்ட போதிலும், சகோதரர்களாகவும் ஒரே தெய்வத்தின் குழந்தைகள் என்றவகையில் ஒருங்குசேர்ந்து அமைந்து வாழும் கலையை மனிதன் இன்னும் கற்கவில்லை எவ்வளவு சமீபத்தில் மனிதர்கள் கொண்டுவரப்படுகின்றார்களோ அவ்வளவுபெரிதான விரிசல்களும் தோற்றுகின்றன இந்தச்சிறியஉலகம் மாறுபட்ட கலாசாரங்களினாலும் மதங்களின் போட்டிகளாலும், ஆசைகளின் மோதல்களாலும் சல்லடையாகிவிட்டது. ஒரு நாட்டின் துயரங்கள் முதலில் பக்கத்து நாடுகளுக்குப்பரவி, பின்னர் உலகம்முழுவதும் பரவிவிடும் உலகம் ஒரு மாபெரும் போர்க்களமாகிவிட்டது:

நன்றி
நாளாந்த நற்சிந்தனை




யாழ்.வைதீஸ்வராச் சந்தியில் அமைக்கப்பட்ட மாவீரர் அலங்காரப் பந்தல்



குடாரப்புப் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கடற் புலிகளின் அணி வகுப்பு. படம்:வே.தவச்செல்வன்

# தொண்டர் ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்பட மாட்டார்கள்

(கொழும்பு)

தற்போதுள்ள தொண்டர் ஆசிரியர்கள் ஆசிரியர் சேவையில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள் என்று கல்வி அமைச்சர் கலாநிதி கருணாசேனகொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிவித்தல்களை மாகாண, வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும், பாடசாலை அதிபர்களுக்கும் அமைச்சர் கருணாசேனகொடித்துவக்கு அனுப்பிவைத்துள்ளார்.

ஆசிரியர் சேவைகளில் சேர்த்துக் கொள்ளப்படுவது தொடர்பான தேசியக் கொள்கைகளுக்கு அமைவாக பல்கலைக்கழகங்கள், கல்வியியற் கல்லூரிகளில்பயிற்சி பெற்றுப் பூர்த்திசெய்தவர்கள் மாத்திரமே ஆசிரியார்களாக நியமிக்கப்படுவார்கள், கல்வித்துறையில்தராதரங்களைக கொண்டிருக்காதவர்களை ஆசிரியர்களாக நியமிப்பதன் மூலம் முழுக் கல்விச்சேவையுமே பாதிக்கப்பட்டுள ளது. என்று அமச்சர் கருனாசேன கொடித்துவக்கு சுட்டிக்காட்டியுள்ளார். (ம)

# இத்தாலி சென்ற 149 பேர் நாடுகடத்தப்பட்டனர்

(கொழும்பு)

இத்தாலிக்குச் சட்டவிரோதமாகக் குடியேறப் படகில் சென்ற போது 149இலங்கை இளைஞர்கள் எகிப்தின் ஹெய்ரோவில் கைது செய்யப்பட்டு நாடுகடத்தப்பட்டனர்.

நாடுகடத்தப்பட்ட 149 இலங்கை இளைஞர்களும் நேற்று கட்டுநாயக்கா விமானநிலையம் வந்தடைந்தபோது அங்கு பொலிசாரினால் கைது செய்யப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட்டனர்.

விசாரணைக்குட்படுத்தப்பட்ட 149பேரில் 141பேர் விடுதலைசெய்யப்பட்டனர். 8பேர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுப் பொலிசார் தெரிவித்துள்ளனர். (ம)

## கிழக்கிலுள்ள...

விடுத்துள்ளார்.

இது தொடர்பாக பிரதமர் பொலிஸ்மா அதிபருக்கு விடுவித்துள்ள உத்தரவில்,

தமிழீழ விடுதலைப் புலிகள கிழக்கு மாகாணத்தில் நீதிமன்றங்கள நிறுவிவருவது குறித்து வெளிவந்த செய்திகள் தொடர்பாக விசாரணைகளை மேற் கொள்ளுமாறும் பணிக்கப்பட்டுள்ளது. (ம)

## மௌனமாய்..

உரை இடம் பெற்றதைத் தொடர்ந்து மாலை 6.05க்கு மணியோசை இசைக்கப்பட்டது. தொடர்ந்து 6.06க்கு அகவணக்கமும் அதனை அடுத்து 6.07க்கு ஈகச் சுடர் ஏற்றும் நிகழ்வும் இடம் பெற்றது. கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் பிரமாண்டமாக அமைக்கப்பட்டிருந்த பொதுச்சுடரை விடுதலைப்புலிகளின் தளபதிகளில் ஒருவரான அருண் ஏற்றி

ணீர்விட்டு கதறி அழுத காட்சி அங்கு கூடிநின்ற எல்லோரையும் நெகிழ வைத்தது.

ஏழு ஆண்டுகளுக்குப்பின்னர் குடாநாட்டு மக்கள் தமது இதயச் சுமையைச் சற்றுஇறக்கி வைத்த நிம்மதியை அவர்களிடம் காண முடிந்தது. இதேவேளை துயிலும் இல்லங்களுக்குச் செல்லும் வீதிகள எங்கும் மக்கள் வெள்ளம் அலைமோதியது.

படையினரும் பொலிசாரும் மக்களின் எழுச்சியைப் பார்த்து பெரும் வியப்படைந்ததையும் அவதானிக்க முடிந்தது.

நேற்றைய நிகழ்வுகளில் விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களான யாழ் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, தளபதி அருண், தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-இ-6,7)

# தூதரகஅதிகாரிகள் நேற்று யாழ் வருகை

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டு தூதரக அதிகாரிகள் அடங்கிய குழ ஒன்று நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தது.

யாழ் பொது நூலகத்திற்கு வருகை தந்த இக்குழுவினரையாழ் மாநகரசபை அதிகாகரிகள் வரவேற்றனர்.

இவர்களுடன் யாழ் மாவட்ட இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவும், வருகைதந்திருந்தார்.

இவ்வதிகாரிகளுடன் இடம் பெற்ற கலந்துரையாடலில் யாழ் குடாநாட்டின் நிலைவரம் குறித்து யாழ் மேயர் செ. கந்தையன் விளக்கமாக எடுத்துக் கூறினார். (ம)

# நெடுந்தீவில் பொலிசார் மீது பொதுமக்கள் கல்வீச்சு

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் முகாமிட்டிருக்கும் ஈ.பி.டி.பி உறுப்பினர்களுக்கு எதிராக நேற்று பன்னிரண்டாவது நாளாக எதிர்ப்புப் போராட்டம் இடம் பெற்றது.

மக்கள் போராட்டம் காரணமாக நெடுந்தீவுப் பகுதியின் இயல்பு நிலை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து போராட்டம் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்ற போதும, ஆக்கபூர்வமான முடிவுகள் எதுவும் இன்னமும் வெளியாகவில்லை.

இதேவேளை நேற்று நண்பகல் நெடுந்தீவில் ஈ.பி.டி.பி உறுப்பினருக்கு பாதுகாப்பு வழங்கிய பொலிசார் மீது மக்கள் கல்வீசித் -தாக்கியதாகவும், இதனால் பொலிசார் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது கண்ணீர்ப்புகைக் குண்டு வீசி அவர்களைத் தாக்கியதாகவும் தெரியவருகின்றது.

இச்சம்பவத்தில் இரண்டு பொலிசார் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இச்சம்பவத்தை நேற்றிரவு வரை உறுதிப்படுத்த முடியவில்லை. (இ)

# புலிகள் ஆயுதத்தைக் கைவிடுவது குறித்து அவர்களுடன் பேச்சு நடத்தவேண்டும்

## ஜனாதிபதி வேண்டுகோள்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டுவிட்டு ஆயுதங்களைக் கீழேபோட்டு, பயங்கரவாதச் செயல்களைக் கைவிடவேண்டும் என்று அமெரிக்கா கூறியதையே ஜனாதிபதி சந்திரிக்காவும்தெரிவித்திருந்தார் விடுதலைப்புலிகள் தொடர்பில் அமெரிக்காவின் நிலைப்பாடுமகிழ்ச்சியைத் தருவதாக அமைந்துள்ளது என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளதாக ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம்பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த ஒஸ்லோ மாநாடு தொடர்பாகவும், அம்மாநாட்டில் அமெரிக்க பிரதிவெளிவிவகார அமைச்சர் ஆம்ரேட்ஜ் தெரிவித்தக் கருத்துச் சம்பந்தமாகவும் ஜனாதிபதி சந்திரிகாவின்கருத்தை ஹரிம் பீரிஸ் விளக்கி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்து வந்த கருத்தையே ஒஸ்லோ மாநாடு பிரதிபலிப்பதாக உள்ளது.

அரசும் விடுதலைப்புலிகளும் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து ஓ்நவருடகாலம் நிறைவடைய இருப்பதால் விடுதலைப் புலிகள் இனிமேல் ஆயுதங்களைக் கைவிட்டு சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்.

விடுதலைப்புலிகள் ஆயுதங்களை கிழே வைப்பது தொடர்பான விடயததை அடுத்தகட்டப் பேச்சு வார்த்தையின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டு அது பேசப்பட வேண்டும்.சமாதான முயற்சிகள் அரசு-புலிகள்-நோர்வே ஆகிய தரப்பினருடன் மட்டும் தங்கியிராது சர்வ கட்சிகளையும் உளளடக்கி சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்.

வடக்குக் கிழக்கில் புலிகள் நீதி மன்றங்களை அமைப்பது இலங்கையின் நீதித்துறைக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் இது இலங்கையின நீதித்துறையைக் கேள்விக் குறியாக்கி உள்ளது.என்றும் தெரிவித்துள்ள ஜனாதிபதி, நெடுந்தீவில் ஈ.பி.டி.பிக்கட்சிக்கு எதிராக விடுதலைப்புலிகள் ஜனநாயக விரோதச் செயல்களில் ஈடுபட்டுள்ளது போல் தெற்கில் ஜே.வி.பியின் காரியாலயங்கள் ஆளும் கட்சியால் அடித்து நொருக்கப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி கவலை வெளியிட்டுள்ளதாகவும் ஹாம்பீரிஸ் தெரிவித்துள்ளார். (ம)

நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த வெளிநாட்டுத் தூதுவர்கள் யாழ்.மாநகர சபை முதல்வர், உறுப்பினர்கள், படை அதிகாரிகளை சந்தித்த போது எடுக்கப்பட்டபடம்.
படம்:டானியல்-றொபேட்சன்



# மரண அறிவித்தல்

## அமரர் மகாலிங்கம் கனகலிங்கம்

... வைக்க, அதனைத் தொடர்ந்து மாவீரா களின் கல்லறைகளுக்கு அவர்க ளின் பெற்றோர்களும், உறவினர்க ளும் ஈகச்சுடரினை ஏற்றினர்.

கனத்த இதயத்துடன் துயிலும் இல்லத்தில் நிலவிய அந்த நிசப்த மான அமைதியில் விழிநீர் சொரிய மாவீரர்களின் கல்லறைகளுக்கு அவர்களின் பெற்றோர்கள் தீபம் ஏற்றிய காட்சி நெஞ்சை ஒருகணம் நெருடிச் சென்றது.

ஈகச்சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து மாவீரர்கீதம் இசைக்கப் பட்டது. சோகம் தாங்க முடியாமல் மாவீரர்களின் உறவினர்கள் கண்






# அமரர் மகாலிங்கம் கனகலிங்கம்

(இளைப்பாறிய பிரதம எழுதுவினைஞர், நீர்ப்பாசனத் திணைக்களம் - கொழும்பு, அநுராதபுரம், கிளிநொச்சி)

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக்கொண்டவரும், தற்பொழுது லண்டனில் வசித்து வந்தவருமான மகாலிங்கம் கனகலிங்கம் அவர்கள் லண்டனில் 24-11-2002ம் திகதி காலமானார்.

அன்னார் இந்திராதேவியின் (லண்டன்) அன்புக்கணவரும், திருச்சியில் வசிக்கும் சங்கரகாந்திலிங்கத்தின் (இளைப்பாறிய அதிபர்-சமாதானநீதவான்) அன்புச்சகோதரரும், இந்திரலிங்கம் (லண்டன்), தியாகலிங்கம் (லண்டன்), சிவாஜிலிங்கம் (யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டப் பாரளுமன்ற உறுப்பினர்), வசந்தினி (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும், தங்கராணி (லண்டன் ராணி பாவுன்), கலாவதி(லண்டன்), ரவீந்திரன் (கனடா ரவி வீடியோ) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுரேந்தர், பிரியந்திதா, ராகவன், லிஸ்மந்திதா, மிதுஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

தகனக்கிரியைகள் லண்டனில் இன்று 28.11.2002ம் திகதி பிற்பகல் 2மணிக்கு லண்டனில் நடைபெறும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தகவல்:-**

**சிவாஜிலிங்கம் M.P. (00-44-208- 9473058) லண்டன்**

**சங்கரகாந்திலிங்கம் (00-91-431-2457039) திருச்சி**

**திருமதி வசந்தினி ரவீந்திரன் (00-1-416-2841229) கனடா.**

**விலாசம்:-**

திருமதி இந்திராதேவி கனகலிங்கம்,
TOOB, GARRATT LANE,
TOOTING,
LONDON SW 17ONN
U.K.

[6241]


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில 28.11.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.